முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 28-8-59 | வெள்ளி | ஒலி: 19

போலீஸ் பொன்னுரங்கம் (வீட்டுக்காட்சி)

மு. கருணாநிதி

[உதய சூரியன் நாடகத்தின் கதையில் இழையோடும் பாத்திரங்களில் ஒன்றான போலீஸ் பொன்னுரங்கம் வீட்டுக் காட்சி யொன்றை போலீசார் நூற்றாண்டு விழா கொண்டாடும் நேரத்தில் நினைவுபடுத்துவது நலமென்று கருதி இதனை வெளியிடுகிறோம்.]

•

[போலீஸ் பொன்னுரங்கம் வீடு. அவரது மனைவி மரகதம் குழந்தையைத் துணியாலான தொட்டி லில் இட்டு தாலாட்டுப் பாடி ஆட்டிக் கொண் டிருக்கிறாள்.]

தாலாட்டு

ஆராரோ! ஆரரீரே!! ஆணழகா கண்வளராய்!
அஞ்சு பத்து சம்பளத்தில் மிஞ்சுவதில் வளரவந்த
அஞ்சுகமே கண்வளராய்! போலீசு வேலைக்கென்று
போகின்ற நொப்பனுக்கு, புத்திரனாய் வந்துதித்த
தரித்திரமே கண்வளராய்!

(அப்பொழுது பொன்னுரங்கம், தொப்பியைக் கழற்றி கையில்வைத்தவாறு தாலாட்டைக் கேட்டுக் கொண்டு, அவளுக்குப் பின்னால் வந்து நிற்கிறான். அவள் கவனிக்காமல் பாடிக்கொண்டிருக்கிறாள்.)

போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண்வளராய்!
துப்பாக்கி எடுத்துகிட்டு போகின்ற நொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வழிமறிக்கும் கடன்காரன்
வருகின்ற காட்சிகளைக் காணாமல் கண்வளராய்!
நாடாளும் மந்திரிகள் நலியாமல் வாழ்வதற்கு
ஓடாகத் தேய்கின்ற அப்பாவின் புத்திரனே!
குருவிக் கூடான வீட்டுக்குள்ளே தவழுகின்ற குலவிளக்கே!
கொசுக்கடிக்கு அஞ்சாமல் குவளை மலர் கண்வளராய்!
காக்கி உடை போட்டுகிட்டு சேப்புத் தொப்பி மாட்டிகிட்டு
நாட்டைக் காக்கும் வீரனுக்கு உன்னைப்போல
நாலுவந்து பிறந்துவிட்டா....காவி உடை வேணுமடா....
கமண்டலமும் தேவையடா....கண்மணியே! கண்
வளராய்!!

ஆராரோ ஆரரிரோ!...இன்னைக்கு உங்கப்பா
வாராரோ இல்லையோ?...யாராரோ மந்திரியாம்
வாராராம் போராராம்...இது வாடிக்கையாய் போச்சுதடா;
வளர்பதியே கண்வளராய்!...

பொன்னுரங்கம்: சபாஷ்! சபாஷ்! மரகதம், மிகப் பிரமாதமான தாலாட்டு!

மரகதம்: (திடுக்கிட்டு) நீங்களா? முன்னயே வந்துட்டீங்களா?

பொன்னு: "போலீசு வேலைக்கென்று போகின்ற நொப்பனுக்கு," அப்படின்னு ஆரம்பிச்சியே; அப்பவே நான் இங்கே ஆஜராயிட்டேன்!

மரக: தாலாட்டுப் பாட்டு; என் மனசில நினைச்சதையெல்லாம் சேத்துப் பாடுனேன்! நல்லா இருந்துதா?

பொன்னு: பிரமாதம் போ! சினிமாவிலே இந்தப் பாட்டை அப்படியே பாடி தாலாட்டினால்...அட்டாடா....எப்படித் தெரியுமா இருக்கும்?

[தொடர்ச்சி பக்கம்—12]

கலப்படம்

ஏ, ஊழலே; குழப்பமே! - உம் மறுபெயர்தான் 'ரயில்வே'யா?

பிரயாணி

ரயிலாம் ரயில்! வெள்ளைக்காரன் காலத்திலே இருப்பதைவிட இப்போது ரொம்ப மோசமாகிவிட்டது. வருஷத்திற்கு வருஷம் விஷம் போல ஏறிக்கொண்டே போகிறதே, ரயில் டிக்கட் பணம்! அப்படித்தான் பணம் அதிகமாக வாங்கினாலும் அதற்குத் தகுந்த சவுகரியமாவது இருக்குதா?

16 பேர் உட்காருவது—என்று எழுதியிருப்பார்கள். எட்டு பேர் படுத்துத் தூங்குவார்கள். 20 பேர் கதவோரத்தில் நின்றுகொண்டிருப்பார்கள், கையிலிருக்கும் சாமான்களை, சாமான் வைக்கும் இடத்தில் வைக்கலாம் என்று வைத்தால் உடனே கீழே படுத்திருக்கும் ஒருவன் சண்டைக்கு வருவான். "அட, நீதான் கீழே படுத்திருக்கிறாயே; மேலே சாமான்களை வைத்தால் என்ன?' —என்று கேட்டால், "நான் கீழே தான் படுத்திருக்கிறேன். இரவு 3 மணியானால் குளிரடிக்கும். அப்போது மேலே படுத்துக்கொள்ள ரிசர்வ் செய்திருக்கிறேன்"—என்பான். அவனுடைய இந்த அநியாயக் கோரிக்கையை எதிர்த்தால் ரகளைதான்! அந்தச்சண்டையில் ரயில்வே போலீசையோ கார்டையோ அழைத்துவரலாமென்றால் அவர்கள் அசதியான தூக்கத்தில் இருப்பார்கள். இப்போது வரமுடியாது என்று கூறிவிடுவார்கள்! நியாயத்திற்குப் போராடுபவர்கள் யாரும் அங்கு இருக்கமாட்டார்கள்; காரணம் சிலர் தூங்குவார்கள், பலர் தூங்குவதுபோல் நடித்து இந்த சண்டை எப்படி முடியும் என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

அதே மாதிரிதான் பெட்டிக்குள் நுழையும்போதும்! 'இடமில்லை; இடமில்லை'—என்று உள்ளே உட்கார்ந்திருப்பவர்களை கூறி அனுப்பிவிடுவார்கள். பிறகு நம் மக்களோ, 'மச்சான் ஏறுகிறான்: மாமன் ஏறுகிறான்'—என்று எல்லோரும் ஒரே வண்டியில் ஏறிட ரயில் போகிறது! மாதத்திற்கொன்றாக விழுந்தும் போகிறது! இதை நினைக்கும்போது ரயிலில் போவதென்றால் வாய்க்கரிசி போட்டுக்கொண்டு, பழங்காலத்தில் போருக்குப் போனமாதிரி போகவேண்டியிருக்கிறது. இப்போது — இந்த விபததுக்கள் அதிகமாக அதிகமாக ரயில் தொடரின் கடைசிப் பெட்டியில் தான் கூட்டம் அதிகமாகிறது. ஏனென்றால், ரயில் விபத்து தப்பித் தவறி ஏற்பட்டுவிட்டால் (தப்பித்தவறி என்ன; அடிக்கடி நிகழ்கிறதே!) முதல் பெட்டிகளெல்லாம் அழிந்த பிறகுதானே கடைசிப் பெட்டி அழியும். அதற்குள் தப்பித்துக்கொள்ளலாம் என்ற எண்ணம்தான்.

அதுவும் தவிர அரியலூரில் நடந்த ரயில் விபத்தில் எல்லாப் பெட்டிகளும் ஆற்று நீருக்கடியில் போய்விட்டாலும், இரண்டு பெட்டிகள் மட்டும் தண்டவாளத்திலேயே நின்றதைப் படத்தில் பார்த்த மக்கள் கடைசிப் பெட்டியில் ஏறினால் தப்பித்துக்கொள்ளலாம் என்று கடைசிப் பெட்டியிலேயே ஏறிக்கொள்ளுகிறார்கள். (ஆனால்; அவர்களுக்குத் தெரியுமா, கடைசிப் பெட்டிகள் மட்டும் கவிழ்ந்து போன கதைகள்?)

இந்தக் காந்தி ராஜ்யம் வந்தாலும் வந்தது, ரயிலிலும் கூட ஏற முடியவில்லை, பயமில்லாமல்! ரயிலில் பிரயாணம் செய்வது தான் இப்படி என்றால் பார்சல் செய்வது, இதைவிடப் படு பயங்கரமான வேலை. கேட்டில் நிற்கும் கூர்க்காவிலிருந்து, பெரிய அதிகாரி வரை லஞ்சம் வாங்குகிறார்கள். அந்தத் 'துண்டை'ப்போடாவிட்டால் காரியம் நடப்பதேயில்லை.

"என்னய்யா; 5 ரூபாய் கொடுக்கிறாய், எத்தனை பேர் இருக்கிறோம்? போதுமா ஐந்து ரூபாய்? இருபது கொடு."—என்று தைரியமாக சத்தம் போட்டு, கொஞ்சமும் நடுக்கமில்லாமல் பணத்தை வாங்குகிறார்கள். லஞ்சம் கொடுக்கும் நமக்குத்தான் நடுங்குகிறதே தவிர, அவர்களுக்கு நடுக்கம் துளியும் இல்லை; நாம்தான் 'குசு குசு'—என்று பேசுகிறோமே தவிர, லஞ்சம் வாங்குகிறவர்கள் 'பணம் கொடு; பணம் கொடு!'—என்று சத்தமிட்டே கேட்கிறார்கள்.

இவர்களைச் சொல்லி என்ன பயன்? மேலிடம் சரியாயிருந்தால்தானே கீழேயிருப்பவர்கள் சரியாயிருப்பார்கள்? தலையிருக்க வால் ஆடுமா? அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி!—என்று சும்மாவா சொன்னார்கள் பெரியவர்கள்?.......ம்.........இதெல்லாம் எப்போது ஒழியுமோ....?

அதிகாரிகள்

நாங்கள் என்ன செய்வது? எங்களுக்குத் தரும் பணத்திற்கும்—விலைவாசிகள் இருக்கும் நிலைக்கும் ஒட்டுறவே கிடையாது. சம்பளம் வாங்கி மூன்று வாரம் கழித்துவிட்டால் உணச் சரியான உணவில்லை! சாம்பாரிலே உப்பிருக்காது. காப்பியிலே சர்க்கரை இருக்காது; போட்டுக்கொள்ளத் துணி வெள்ளையாய்இருக்காது. பொது இடங்களிலே பழகுகிற எங்களுக்கு இந்த சவுகரியம் கூட செய்து வைக்காத சர்க்காரைப் பற்றி யாராவது நினைக்கிறார்களா? எல்லாம் எங்கள் தலைமேல் தான் விழுகிறது. லஞ்சம் வாங்குவது குற்றம்தான்; அதைத் தவிர பஞ்சத்தை விரட்டும் வழி தெரியவில்லையே; ஏதோ ஒரு சிலர் 'கூச்சமில்லாமல்' லஞ்சம் வாங்கலாம், அதற்காக எல்லா அதிகாரிகளையும் நோவது சரியல்ல; நாங்களும் மனிதர்கள்; எங்களுக்கும் இதயமிருக்கிறது. தவறி நடக்கும்போது எங்களுக்கும் கை கூசவே செய்கிறது.

இருப்பினும், ஒரு கைப்பிடி பரிமாணமுள்ள இதயத்துடன் ஏறத்தாழ 20 அடி நீளமுள்ள குடலும், இரைப்பையும் இருக்கிறதே! மனைவி, மக்கள் அத்துணை பேருடைய வயிற்றுக்கும் உணவிடவேண்டியிருக்கிறதே!

ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் பெண்—என்றால் மற்றவர்கள் பெண்ணைப்போல் வளர்க்கமுடியுமா? 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்று விட முடியுமா?—வயிற்றுக்கு மாத்திரமல்ல; சமுதாயத்திற்கென அளவான ஆடம்பரத்திற்கும், எதிர்காலத்திற்கென படிப்பிற்கும் நாங்கள் செலவழிக்கவேண்டியிருக்கிறது.

இத்தனைக்கும் என் வருவாய்—தனிப்பட்ட ஒருவனின் வருவாய் போதுமா? வருகிறபோகிற மந்திரிகளுக்கு 'சலாம்' போடுவதே பெருந்தொழிலாய்இருந்துவிடுகிறது. இந்தக் 'கடமையல்லாத கடமை'யைச் செய்து தொலைக்கும்போது கடமையில் ஓட்டை விழாமல் என்ன செய்யும்? விபத்துகள் விளையாமல் என்ன செய்யும்?

மனிதக் கண் கொண்டு எங்களைப் பார்த்தால் எங்கள் தவறுகள் மிக விரைவில் திருத்தப்படக் கூடியவை!

எங்கள் நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு, வருவாய் எங்களுக்கிருந்தால், லஞ்சம் வாங்கும் 'புத்தி' எங்களுக்கு ஏற்படுமா?

மத்திய அரசு

ஆமாம்; இவர்களுக்கென்ன கேடு? எத்தனை கொடுத்தாலும் போதாது என்று பூபாளம் பாடுகிறார்கள்! கடமையையாவது ஒழுங்காகச் செய்கிறார்களா?

மக்கள் கிடக்கட்டும்; மந்திரிகளை மதிக்கிறார்களா இவர்கள்? நாட்டின் நாயகர்களை அவமதிக்கும் இவர்கள் வாழ்ந்தாலென்ன; கெட்டாலென்ன?

முன்பொருதடவை இப்படித்தான் ஒரு மந்திரியையே கையைப் பிடித்து நிறுத்திவிட்டார்கள்.

மந்திரி டிக்கட் வாங்க வேண்டுமாம்!

என்ன திமிர், இவர்களுக்கு?

மந்திரியை ஒரு டிக்கட் கலெக்டர் கூப்பிட்டு 'டிக்கட் எங்கே' —என்று கேட்பது என்றால் என்ன அர்த்தம்?

இந்த அதிகாரிகளால் நாங்கள் படும் அவதி கொஞ்சமா; நஞ்சமா?

அரசினரே எடுத்து நடத்திய ரயில்வே உணவு விடுதிகளில் மாத்திரம் 18·16 லட்ச ரூபாய் நட்டம் வந்திருக்கிறதே ஏன?

—எல்லாம் இந்த சிப்பந்திகளால்தான்! ஏதாவது ஒழுங்காக நிர்வாகம் நடத்தமுடிகிறதா?

ஆட்சியாளர் மொழியான இநதி மொழியைக் கற்றுக்கொள்—என்றால் கற்றுக்கொள்கிறார்களா?

நாங்கள் பேசுவது அவர்களுக்குப் புரிவதில்லை; அவர்கள் பேசுவது எஙகளுக்குப் புரயவில்லை. (எஙகளுககு ஏன புரியவேண்டுய; அவர்கள் மொழி? நாங்களென்ன அவர்களுக்கு அடிமையா?...?)

மிரட்டினோம்; கற்பாரில்லை! பணம் காட்டி ஆசை மூட்டினோம்; எங்கள் பக்கம ஆசைககரம் நீட்டுவாரில்லை! இநத மொழி புரியா முண்டங்களை வைத்துக்கொண்டுயார் அழுவது? நிர்வாகமதான ஒழுங்குபடடு வருமா?

மாநில அரசு

நாங்கள் ஆளும் மண்ணின் மீது ரயில் ஓடினாலும், எஙகள் மொழி பேசுவோர் அந்த ரயில் வேபல் வேலை செய்தாலும், விமமி அழுதாலும், அங்கேஊன ழல் நிறைந்தாலும் நாங்கள் அதைத் திரும்பிப்பார்க்கமாட்டோம; ஒரு வார்த்தைகூட கேட்கமாட்டோம்! காரணம், ரயில்வே இலாகா, மத....திய...அரசு இலாகா! அதாவது எங்கள் எஜமானர் இலாகாவாக்கும்'

அதற்குக் கிடைத்த சுகம்!

வெள்ளையன் ஆட்சியில் ஆங்கிலம் படித்தவனுக்கிருந்ததுபோல் வடவர் ஆட்சியிலே 'இந்தி தெரிந்தவனுக்கு சுகவாழ்வு உறுதி' என்ற நிலைஏற்பட்டிருக்கிறது.

அறிஞராயிருந்தாலும், மேதையாயிருந்தாலும், வல்லுனராயிருந்தலும் அவாகளுக்குக் கிஞ்சித்தும் கவலையில்லை!

இந்தி மொழி தெரிந்திருந்தால் போதும், அறிவிலியாயிருந்தாலும், ஆற்றல் அற்றவனாய் இருந்தாலும பரவாயில்லை! டில்லி சென்று நல்வாழ்வு பெறலாம்! ஏன் — மிருகங்களுக்குக்கூட இந்தி தெரிநதால் டில்லியின் அரவணைப்புக் கிட்டும் என்பதைக கீழ்க்காணும செய்தி நிரூபிக்கிறது.

"நாலரை வயதுள்ள 'கோபால் ரெட்டி' — எனும் பெயருள்ள இந்தி தெரிந்த யானை டில்லிக்குப் பயணமாகிறது!"

இந்தி தெரிந்தால் போதும், பகுத்தறிவுகூடத் தேவையில்லை. ஆட்சியாளர் அரவணைப்பிற்கு!

வெள்ளி 28—8—59 சென்னை

காவலர்களைக் காப்பாற்றுவீர்!

தமிழகத்துப் போலீசார் விழாக் கொண்டாடுகின்றனர்!

விழாக் காலங்களில் விழிகளைக் கூர்மையாக்கிக்கொண்டு நின்றவர்கள்—வீதியோரத்தில் வீணர்களின் நடமாட்டத்தைக் குறைத்து, மூடமாக்கிப்போட்டவர்கள்—பீதி கொண்ட மக்களிடத்தே உறவாடி நீதியைக் காக்கப் பாடுபட்டவர்கள் — 'நாங்களும் சிரித்திட நேரம் ஒன்று வந்தது' என்று பண்பாடிக் களிக்கிறார்கள்!

தமிழகத்துப் போலீசுப் படை நூறு வயது பூர்த்தி அடைந்த நல்ல நாளைத் திருநாளாக்கிக் குதூகலிக்கிறது!

அவர்களது முகத்திலே காலமெல்லாம் மண்டிக்கிடந்த கடமையுணர்ச்சியுடன் இன்று போட்டியிட்டுத் தோன்றுகிறது, புதுமலர்ச்சி! உழைத்து உழைத்து உரம் பெற்றுவிட்டவர்களிடம் புதுத்தெம்பும், உருக்குலைந்து போனவர்களிடம் புது நம்பிக்கையும் இன்று ஏற்பட்டிருக்கிறது!

வெப்பத்தைத் துச்சமென மதித்து, அச்சத்தை அயர்வால் போக்கிப் பாடுபட்ட உழவனின் பாதம்பட்ட சேறும் சகதியும் சந்தனமாக மாறுகிறது ஒருநாள்—உழைப்பின் பலனை அவன் அறுவடை செய்கிற காலத்தில்!

அலையிடைப்பட்ட துரும்புபோல் ஆலையிடைப்பட்டு உழன்று கொண்டிருந்த தொழிலாளத் தோழனின் தோள்கள் புடைத்து எழுந்து விம்முகின்ற காட்சியைக் காணலாம் ஒருநாள் — அவன் உதிரம் கொட்டியதால் உருவாகி நிற்கின்ற பொருட்களைப் பார்க்கிற நேரத்தில்!

உழைப்பவர் பெறுகின்ற அந்தத் திருவிழாக் கோலத்தைத்தான் இன்று நம் நாட்டின் போலீசார் பெற்றிருக்கின்றனர்.

நூறாண்டு காலம் அவர்கள் வாழ்ந்துவிட்டார்கள்; நாடாண்டவர் மாறினர் இடையில். ஆனால் காவற்படையினரோ அன்றும் இன்றும் வீசப்பட்ட செங்கற்களைப்போல்—ஏவப்பட்ட அம்புகளைப்போல்—தரப்பட்ட பணிகளைச் செய்துமுடித்த பூரிப்போடு தங்களது கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறார்கள்!

கடமையை நிறைவேற்ற காடுமேடு சுற்றியிருக்கிறார்கள்; இரவையும் பகலையும், வாட்டிய வெப்பத்தையும், கொட்டிய மழையையும் ஒன்றாகக் கருதியிருக்கிறார்கள்; கொடியவர்களின் கூடாரத்தில் புகுந்திருக்கிறார்கள்; சாவுக்கும் வாழ்வுக்குமிடையே போராடியிருக்கிறார்கள்; பிணங்களைக் காவல் புரிந்திருக்கிறார்கள்; பேய் உலவிட அஞ்சும் காடுகள்—எனப்படும் வெட்டார வெளிகளிலே — தன்னந்தனியாக நாள் கணக்கில் நின்றிருக்கிறார்கள். பெண்டு பிள்ளைகள் அவர்களுக்குமுண்டு; என்றாலும் தொண்டு புரிய வந்துவிட்டோம்—என்று பண்புள்ளம் எடுத்தோதிட வையம் கண்டு நடுநடுங்கும் உலகத்து வைரிகளை போராடிப் பிடித்திருக்கிறார்கள். திடுக்கிடும் அனுபவங்களை ஆயிரக் கணக்கிலே உள்ள இடுக்குகளிலே வைத்துக் கொண்டுள்ள அவர்கள் மரணத்தின் எல்லைக் கோட்டில் சூழ்ந்து நின்று கொக்கரிக்கும் தொல்லைகளுக்கு அஞ்சாது கடமையாற்றியிருக்கிறார்கள். தூய நற்றொண்டுள்ளத்தால் ஆவியைக் கூடப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள்!

அந்த நலன் குவித்த நல்ல பண்பினை—நீதி காத்த நற்பணிகளை நாடு வரவேற்கிறது; மேலும் மேலும் உழைக்க — மேதினி போற்றும் புகழ் சேர்க்க வாழ்த்துகிறது!

ஆனால், அதே நேரத்தில், தொண்டு புரியும் தூய நல்லிதயம் கொண்ட அந்தப் போலீசாரைக் கண்டு மக்கள் மருளுகிறார்களே; ஏன்? குற்றம் இழைத்தவர்களும், சட்டத்தை மதியாத சதிக் குணக் கொடியவர்களும் அஞ்சுகிறார்கள்—எதிர்பார்க்க வேண்டியதுதான். ஆனால், எதுமறியாத எமாளிகளாம் இந்த நாட்டுப் பாமரர்கள் போலீஸ் உடையைக் கண்டதுமே அலறித் துடித்து ஓடி மறைய முயற்சிக்கிறார்களே; எதற்காக?

அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படும் நேரத்தில் போலீசார் பயங்கரவாதிகளாக மக்களுக்குத் தெரிகிறார்கள் ஆனாலும், அதற்கு அவர்கள் காரணமல்லவே! அவர்களுக்கு ஆணையிடுகின்ற ஆட்சி பீடமல்லவா முழுமுதற் காரணமாகும்? 'தூயவர்களை நோக்கியும் நீட்டு துப்பாக்கியை — கடமைவாதிகளைக் கண்டும் கண்ணீர்ப் புகையை வீசு—பகைக்கஞ்சாக் கொள்கைவாதிகளையும் தொகை தொகையாகப் பிடித்தடைப்பாய் சிறைக்கோட்டத்தில்' என்று பாய்கின்ற கட்டளைகளை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள்; இது அவர்கள் குற்றமல்லவே! கண்டிக்கப்படவேண்டியது அந்தக் காவலர்களைத் தங்கள் காலடியில் பணியவைத்திருக்கும் அரசாங்கம் அல்லவா?

மற்றுமொரு குறைபாட்டுக்கும் அவர்கள் பதில் சொல்லவேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள். 'போலீசார் பெருகி என்ன பலன்? குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டுதானே இருக்கின்றன? அவர்கள் நாடு காக்கும் இலட்சணம் இதுதானா?' என்று வினாக் குறிகள் எழும்பத்தான் செய்கின்றன.

போலீஸ் படைக்காகச் செலவிடப்படுகின்ற தொகை அதிகம் தான்; புதிய புதிய காவல் நிலையங்கள் பலவற்றைத் திறக்கத்தான் செய்கிறார்கள்; ஆனாலும் குற்றங்கள் அதிகரிப்பானேன்? அதற்குக் காரணம் என்ன? இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டால் உண்மை மிகச் சாதாரணமாகப் புலப்படுகிறது, நமக்கு.

போலீசார் திறமையற்றவர்களா? தீயவர்களைக் கண்டால் தொடை நடுக்கம் எடுப்பவர்களா? கொலைகாரனை நெருங்க அஞ்சுகின்ற கோழைகளா? திருடனைத் தீண்டுவது 'பாபம்' என்று கூறுகிற குறைமதியாளர்களா? இல்லை; இல்லை; அவர்கள் கள்ள மார்க்கெட்காரர்களின் கண்வீச்சுக்குப் பலியாகக்கூடியவர்கள் அல்ல; திருட்டுச் சாராய வணிகர்களுக்குத் துணை நிற்கும் பண்புடையவர்களும் அல்ல. இருந்தாலும் குற்றங்கள் மலிந்துதான் போய்விட்டன. அதன் முழுக் காரணமும், அந்தப் போலீசாருக்குத் திசைகாட்டும் வழிகாட்டிகளின் நடவடிக்கைகளேயாகும்!

போலீசாரைப் பயன்படுத்தத் தெரியாத காரணத்தாலேயே குற்றங்கள் தவிர்க்கமுடியாத அளவில் மிதந்துவிட்டன. கணக்கெழுத வந்தவன் கட்டழகன் என்ற காரணத்தால், சீமாட்டியின் பள்ளியறைப் பிரவேசியாகிவிட்டால், கணக்கெழுதும் வேலை ஒழுங்காகவா நடக்கும்? அதைப்போலத்தான் போலீசாரின் பணியும் திசைமாறிப் போய்விடுகின்றது.

மந்திரிமார் பயணத்தின்போது படையணிபோல் நடை போட—கவர்னர் பெருந்தலைகளின் முன்னாலும் பின்னாலும் போய்வர—எதிர்க் கட்சிகளை அடக்க — அடக்குமுறைகளைப் பிரயோகிக்க—தடையை மீறினால் கைது செய்ய—துப்பாக்கிப் பிரயோகம் செய்ய—தடியடி தர்பார் நடத்த—பாதுகாப்புக் கைதிகளைப் பிடிக்க—இப்படிப் பலவாக பயன்படுத்தப்படுகிறது, போலீஸ். நாசத்தைத் தடுத்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல இலட்சியங்களிலிருந்து போலீசார் பிரிக்கப்பட்டு, காங்கிரசையும் காங்கிரஸ் ஆட்சியையும் கரையாமல் கண்காணிக்கவே வளர்க்கப் பாடுபடுகிறார்கள்!

இவை மட்டுமல்ல; நாட்டு நலனின் காவலர்களாகிய அவர்களது வாழ்வுக்குக் காவல் இல்லை; அது வேலியில்லா பயிராகத் தோன்றுகிறது. வறுமையும், போதிய வருமானமின்மையும் அவர்களது அமைதியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று வருகின்றன.

அவர்களது சேவையை அளவுக்கு மீறி அனுபவித்து வருகிற அரசாங்கம் நீண்ட காலம் அவர்களது கோரிக்கை ஒன்றுக்குக்கூட செவி மடுக்காதிருப்பது பெரும் வியப்பாகும். ஊதிய உயர்வு கேட்டு அவர்கள் நடத்தி வருகின்ற போராட்டம் இன்றுவரை முடிவு பெறாமலே இருக்கிறது. எல்லோரும் கடைப்பிடிக்கின்ற 'வேலை நிறுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டபோதுகூட சர்க்கார் அவர்களது தேவைகளைக் கேட்க மறுத்தது. துப்பாக்கி பிடித்த அவர்களையே மலையாளத் தனிப் போலீசார் துப்பாக்கி பிடித்து மிரட்டியதை நாடு மறக்கவில்லை; இந்த நல்ல நேரத்தில் அதை நினைவு படுத்தவும் விரும்புகிறது!

போலீசார் பொதுத் தொண்டர்கள்— அவர்கள் சொந்த வாழ்விலே நிம்மதி நிலவினால்தான், நாட்டின் அமைதி காக்கும் பெரும்பணியிலே அவர்கள் பெருமளவு ஈடுபடமுடியும்!

ஆகவே, நூற்றாண்டு விழா கொண்டாடும் அந்தக் கடமைவாதிகளின் பல்லாண்டு கால கோரிக்கைகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று மேலும் வேண்டுகிறோம்! ஆ

சுலேக்கா தயாரிக்கும் முதற் படம்

அண்மையில் படத்தயாரிப்புக் குழுக்களின் எண்ணிக்கை உயர்ந்த வண்ணம் இருக்கிறது. அந்தப் பேரேட்டில் சேர்ந்த புதுப் பெயர் — புதுப் படத் தயாரிப்புக்குழு சுலேகா படத் தயாரிப்புக் குழுவினராவர். இவர்கள் தயாரிக்கப் போகும் முதற் படத்தில் எம். என். இராஜம், பிரேம்நசீர் முதலியோர் நடிக்கின்றனர். கடந்த இரு வாரங்களாக படத் தயாரிப்பின் வேகம் அதிகமாகியிருக்கிறது. ஜாவர் சீதாராமன் கதை, வசனம் எழுத, மஸ்தான் டைரக்ட் செய்யும் இப் படத்திற்கு இசையமைக்கும் பொறுப்பை இசைச் செல்வர். சிதம்பரம். ஜெயராமன் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

சகோதரி

ஜி. கே. புரொடக்ஷன்சாரின் ‘சகோதரி’ முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. அக்டோபரில் படத்தை வெளிக் கொணர வேண்டும் என்பதற்காக டைரக்டர் பீம்சிங் அவர்கள் ஆவன செய்து கொண்டிருக்கிருர். ‘மரகத’த்திற்கு அடுத்தபடியாக மாறன் வசனம் எழுதி வெளி வருகின்ற படம் இதுவாகத்தான் இருக்கும்

பாலாஜி, பிரேம்நசீர் ராஜசுலோசன, தேவிகா, நாகையா. முதலியோர் நடித்திருக்கின்ற அப்படம் ஏ. வி. எம். முடன் கூட்டாகத் தயாராகி யிருக்கிறது. வெளிநாடு சென்றிருக்கும் ஏ. வி. எம் அதிபர் ஏ. வி. மெய்யப்பன் அவர்கள் திரும்பி வந்தவுடன் வெளியிடும் நாள் குறிக்கப்படும் என்று தெரிகிறது.

“குறவஞ்சி” வளர்கிறது!

ஆசிரியர் மு. கருணநிதியின் கதை வசனத்துடன் தயாராகி வருகின்ற மேகலா பிக்சர்சாரின் “குறவஞ்சி” விரைவில் திரையிடப்படுவதற்கான இறுதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் அதற்காக குறவஞ்சி நடனப் பாடல் ஒன்று படமாக்கப்பட்டது; ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் தயாராகும் அந்த நடனம் படத்தின் முக்கியமான காட்சிகள் பலவற்றுள் ஒன்ருக இருக்கும். நடன ஆசிரியர் தண்டாயுதபாணி அவர்களால் அமைக்கப்பட்ட அந்த நடனத்தில் சாவித்திரி, பத்மினி பிரியதர்சினி, எல். விஜய லட்சுமி—முதலியோர் பங்கேற்றிருக்கின்றனர்.

சிவாஜி கணேசன், சாவித்திரி, பண்டரிபாய், மைனுவதி, சுசீலா, ஓ. ஏ. கே தேவர், குலதெய்வம் ராஜகோபால், வகாப் காஷ்மீரி, எம். என். கிருஷ்ணன் முதலியோர் நடிக்கும் இப்படத்தை ஏ. காசிலிங்கம் அவர்கள் டைரக்ட் செய்கிருர்.

காவேரியின் கணவன்

செப்டம்பர் மாதத்தில் வெளிவர இருக்கின்ற திரைப்படங்களில் அருணசலம் பிக்சர்சாரின ‘காவேரியின கணவ’னும் ஒன்ருக இருக்கும். அந்த நிறுவனத்தின் அதிபர் ஏ. கே. வேலன் கதை, வசனம் அமைத்து டைரக்ட் செய்திருக்கும் அந்தப் படத்திற்கு முதலில் ‘டாக்டர்’ என்று பெயர் சூட்டியிருந்தார்கள்.

வளையாபதி முத்துகிருஷ்ணன், சௌகார் ஜானகி ஆகியோர் பிரதம பாகத்தில் நடித்திருக்கின்ற அந்தப்படம் மிகவும் குறுகிய காலத்திலேயே தயாரிக்கப் பட்டிருக்கிறது.

தமிழாகும் தெலுங்குப் படங்கள்!

1 ரிபப்ளிக் புரொடக்ஷன்சார் தயாரித்திருக்கின்ற ‘பெளனி சந்தடா’ என்ற தெலுங்குப் படத்தை இப்போது தமிழில் ‘டப்’ செய்துவருகிருர்கள். யோகானந்த் டைரக்ட் செய்திருக்கிற இந்தப் படத்தில் அஞ்சலி தேவி, நாகேஸ்வர ராவ், சரோஜாதேவி — முதலியோர் நடித்திருக்கின்றனர்.

2. அதைப்போலவே ‘வீர பாஸ்கருடு’ என்ற படமும் தமிழாகி வருகிறது. உதயகுமார், கண்ணும்பா, வரலட்சுமி—முதலியோர் இந்தப் படத்தில் நடித்திருக்கின்றனர்.

திரையுலகிலே ‘தெய்வங்கள்’!

சமீபகாலத்தில் திரையுலகில் ‘தெய்வ’த்திற்கு வியக்கததக்க அளவில் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது. படத்திற்கென்று வைக்கப்படுகின்ற பெயர்களில் ‘தெய்வங்கள்’ மிகவும் அதிகமாக இடம் பெறுகின்றன. ‘குல தெய்வம்’ ‘அன்பே தெய்வம்’ போன்ற படங்கள் வெளியான பிறகு, அடுத்து வருகின்ற படங்களின் விபரம் கீழே தரப்பட்டிருக்கிறது:

தேவர் பிலிம்சார் தயாரித்திருக்கும் ‘வாழவைத்த தெய்வம்’ இம்மாதம் 28-ம் நாள் வெளிவர இருக்கிறது!

‘பெண் தெய்வம்’ — என்ற பெயரில் கூட ஒரு திரைப்படம் தயாராகிக் கொண்டிருப்பதாக முன்பொரு தடவை அறிக்கை வெளிவந்திருந்தது.

எஸ். பி. எஸ். புரொடக்ஷன்சாரின் முதல் தயாரிப்பு ‘தெய்வமே துணை’ என்ற பெயரில சூடப் பட்டு வருகிறது!

‘மாதா பிதா குரு தெய்வம்’ என்ற பெயரில் ஏழுமலையான் பிக்சர்சார் ஒரு படத்தைத் தயாரிக்கின்றனர்.

விடைகொடு-தாயே!

சென்ற 9—8—59 அன்று, சென்னை, திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சபா அரங்கில் “விடைகொடு—தாயே” என்ற சமூக நாடகம் நடைபெற்றது. சொர்ணம் எழுதிய அந்த நாடகத்தை பாண்டியன் நாடக மன்றத்தினர் சிறப்புற நடித்தனர்.

நாடகத்திற்குத் தலைமை வகித்த ஆசிரியர் மு. கருணநிதி அவர்கள், நாடகத்தைப் பெரிதும் பாராட்டிப் பேசினர். நகரத் தந்தை அ. பொ. அரசு அவர்களும் நாடகத்தின் வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். தோழர்கள் இராம. அரங்கண்ணல், இரா. செழியன் எம். ஏ., மாறன் எம். ஏ. — முதலியோர் வந்திருந்து சிறப்பித்தனர்.

நாடகத்தைக் குறித்து தமிழகத்தின் ஏடுகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றன:

“வெற்றிப் படைப்பு — ‘விடைகொடு தாயே’ ”

—என்று “தினத்தந்தி”யும்,

“....சமுதாயத்தின் சரிவுகளை நன்கு சித்தரித்து நல்ல பல கருத்துக்களைத் தந்திருக்கிருர்கள்...இத்தகைய நாடகங்கள் நாட்டுக்குத் தேவை!...”

—என்று “சினிமா டைம்ஸ்” இதழும்,

“....வசனத்தில் வண்ணத் தமிழின் வனப்பும், செங்கரும்பின் இனிப்பும் இரண்டறக் கலந்திருந்தது என்பதை எழுதத் தேவையில்லை...”

—என்று “திராவிடன்” ஏடும்,

“...மொத்தத்தில் இவ்வாண்டின் சிறந்ததொரு நாடகமாக இதை ஆக்கித் தந்திருக்கிருர்கள்....”

— என்று “தென்றல் திரை” யும்,

“....நளினமான ஓர் சூழ்நிலையை நாசுக்காக உருவாக்கி, கற்பின் உண்மை சொருபத்தை எக்கச்சக்கமான கோணங்களிலிருந்து சித்தரித்துக் காட்டி, நாடகக் கதைக்கு நிரவலாக ஊட்டமளித்திருக்கிருர்கள்.....”

—என்று “சுதேச மித்திரன்” வார இதழும்,

“....மொத்தத்தில் ‘விடைகொடு—தாயே’ நாடகத்தைப் பார்த்த ஒவ்வொருவரும் தன் தாயிடமே ‘விடைகொடு தாயே’ நான் மீண்டும் நாடகத்தைப் பார்த்துவர என்று கேட்பார்கள் என்பது திண்ணம்...”

—என்று “கலைஞன்” இதழும்,

“...முக்கால் பாகம்வரை கதையை விறு விறுப்பாகக் கொண்டு செல்லும் கதாசிரியர், கடைசியில் கதையை ‘சப்’ என்று முடித்து விடுகிருர்....”

— என்று “கலைப்பூங்கா”வும்,

“...செல்வம் கடைசியில் ‘விடைகொடு, தாயே!’ என்று கேட்டு விடைபெற்றுச் சிறை செல்கிருன். களங்கமடைந்த தேவியைக் கரம் பற்ற அவன் சிறையிலிருந்து வரப் போவதாகக் காட்டி நாடகத்தை உயிர்த் துடிப்புடன் முடித்திருப்பது பாராட்டுக்குரியது...”

—என்று ‘கல்கி’ வார இதழும் பாராட்டி எழுதியிருக்கின்றன!

நாடகத்தில் எம். என் கிருஷ்ணன், மனேரமா, நிர்மலா, எஸ். ஆர். கோபால், எஸ் ஏ. ஜி. சாமி. செந்தாமரை, இளம்பரிதி —மற்றும் பலர் நடித்தனர்.

மேகலா பிக்சர்சின் “குறவஞ்சி”யில் இடம் பெறுகின்ற இலக்கியச்செறிவுள்ள காட்சியில் சாவித்திரி இப்படித் தோன்றுகிருர்.

பதவி விலகல் எனும் நாடகம்-பட்டினிப் புயலைத் தடுத்திடுமோ?

உண்ண உணவில்லை என கண்ணீர் சிந்தியவண்ணம் தாய் கூற, ஏனிந்த நிலை என்று கனிமொழி மழலையிலே மகன் கேட்க, அரசியல் தெரியாத காரணத்தால் 'அரிசி விலை உயர்ந்துவிட்டதடா' என்று இன்றைய நிலையை மாத்திரம் கூறி, பெற்ற மகனை பட்டினி கிடந்த வயிற்றோடு சேர்த்து, அணைத்து தாய்க்குலம் அழுகின்ற காட்சிகள் 'ஏகபாரதத்தில்' இப்போது எங்கும் நிகழ ஆரம்பித்து விட்டன!

இது ஏதோ சொல்லலங்காரம்; சொற் சிலம்பம்—என்று எண்ணிடும் ஏழுடுக்குவாசிகளுக்கு இது அன்றாடம் நிகழும் காட்சி எனத் தெரியாது! காரணம், அவர்களுக்கு அலங்காரம் தான் தெரியும்; நாட்டின் அலங்கோலம் அவர்களுக்குப் புரியாது. சிலம்ப விளையாட்டுததான் தெரியும்; களைகெட்டுப்போன முகங்களை அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள்.

இரவில் சுள்ளி கொண்டு வந்து போட்டுக் கொளுத்தி, வானத்து நிலவு போன்ற ஒளி மிக்க அரிசிப் பருக்கைகளை எப்போதோ ஒரு நாள் கண்டு மயங்கி அள்ளி விழுங்குவோர் இந்த நாட்டில் எண்ணற்றோர்!

அவர்களின் இரவுச் சோற்றிலேகூட கண்ணற்றோரின் ஆட்சி மண் அள்ளிப் போட்டது! துணைக் கண்டம் பூராவும் உணவின்றித் தவிக்கிற நிலையை இந்நாட்டின் உணவு இலாகா ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

ஏறத்தாழ, ஒரு மாதமாக நடைபெற்று வரும் உணவு—உணவின் விலையேற்றம்—உணவு மண்டலம் ஆகியவற்றைக் கவனித்து வருவோருக்கு இன்று டில்லி அமைச்சரவையில் ஏற்பட்ட விபத்திற்குக் காரணம் புரியும்!

ஆம்; டில்லி உணவு அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயின் பதவி விலகல் நாடகத்தின் பொருளும் எளிதில் விளங்கும்!

முதலில், அவர் **விலகியது ஏன்?**

நாட்டைப் பஞ்சக் காடாக்கி விட்ட பாவத்திற்குத் தன் பதவி விலகுதல் மூலம் பிராயச்சித்தம் தேட நினைக்கிறார். அரிசிப் பஞ்சம், சோளப் பஞ்சம், சீனிப் பஞ்சம்—என்று புற்றில் ஈசல் புறப்பட்டது போலே நாடெங்கும் 'பஞ்சங்கள்'—உலா வரும்படி நோய் நிலையை நாட்டுவளத் தோட்டத்திலே உண்டாக்கி விட்டு கடைசி காலத்தில் பூச்சி விளைந்த அறுவடைப் பங்கை மாத்திரம் வேண்டாம் என்று கூறுவதிலே மட்டும் பெருமை கொள்ளப் பார்க்கிறார், உணவுத் துறை அமைச்சர்.

இந்தப் பெருமைகூட அவருக்குச் சரிவரக் கிட்டவில்லை; ஏன் எனில் பாராளுமன்றத்திலே நாட்டின் நிலை குறித்து காட்டமான வாதங்களும், அமைச்சரை நோக்கி அனலும் கனலும் அங்கத்தினர் சொற்களின் வழியாக வந்த பிறகுதான் அவர் பதவி விலகுகிறார்!

உத்திரப் பிரதேசத்தில் 'சோறு போடு; அல்லது வேலை கொடு' — 'உரிமை'யுடன் அந்த நாட்டு மக்கள் ஊர்வலம் நடத்தியபோது, தங்கள் உள்ளக் குமுறலை வெளியிட்டபோது வாய்மூடி ஊமையாய்க் கிடந்த அமைச்சர் இப்போது பதவி விலகுகிறார்.

மேற்கு வங்கத்தில், 'அரிசி விலையைக் கட்டுப்படுத்து'— என்று மக்கள் ஒலி எழுப்பினர்; மீண்டும் 'ஒரு கொடிய வங்காளப் பஞ்சத்தை ஏற்படுத்திவிடாதீர்கள்!' — என்று எச்சரிக்கை தந்தபோது, எம். எல். ஏக்கள் உட்பட நூற்றுக்கணக்கான பேர் சிறைப் பறவைகளாய் மாறியபோது, தன் அரசாங்கத்தின் போக்கை சீர்படுத்தி நாட்டு மக்களுக்கு அரிசி விலையை நியாய விலைக்கு ஆக்கித்தராத அந்த அமைச்சர் இன்று, 'ஜனநாயக சூழ்நிலை'யைப் புனிதப்படுத்தும் பொருட்டு பதவியினின்று விலகுகிறாராம்!

ஆந்திரத்திலே ரூபாய்க்கு 2 படி அரிசி விற்கவேண்டும், ரூபாய்க்கு 3 படி சோளம் விற்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடம் வைத்து, அலட்சியத்தைப் பரிசாகப் பெற்று, பின் பலாத்காரத்தில் இறங்கி, பம்பாய் எக்ஸ்பிரசை நிறுத்தி, இரண்டு 'வாகின்'களை உடைத்து, 'ஆகஸ்ட்' போர் நடத்தினார்கள், கடந்த ஆகஸ்ட் பத்தாம் தேதி. அப்போது கூட அமைச்சர் உணவு தானியம் அமோகமாகக் கிடைக்கிறது — என்றுதான் கூவிக்கொண்டிருந்தார்!

நாடெங்கும் போராட்டம் நடந்தபோது, 'செந்நெல் விளையும் காடு இது; வீண் கலகம் ஏன்?'—என்று பேசித்தீர்த்தார்.

ஆனல்... பாராளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்களிடமிருந்தே வந்த பயங்கர வார்த்தைகளும், பதட்டம் தரும் பேச்சும், புள்ளிவிபரங்களும் சேர்ந்து அமைச்சரை எதிர்த்து நின்றன.

முதன்முதல் அமைச்சரைக் கடுமையாகத் தாக்கியவர் முன்னாள் காங்கிரஸ் பார்லிமெண்டரி செயலாளர்தானும்! தன் கட்சியினரே நம்பிக்கையிழந்ததைப் பார்த்து வேதனையுற்ற அமைச்சர் நேருவைப்பார்த்தார்! நேரு தலை குனிந்துகொண்டார்! மந்திரியார் 'எனக்கும் அமைச்சரவைக்கும் கருத்து வேறுபாடு! ஆகவே இதோ பதவி விலகல் கடிதம்— என்று அறிவித்துவிட்டார்.

உணவு மந்திரி கூறுகின்ற காரணங்கள் பற்றியோ, அதற்குப் பிரதம மந்திரி கூறப்போகும் பதில் பற்றியோ இந்த நாட்டு மக்களின் கவனம் திருப்பப்படலாம், சிலகாலம்!

ஆனலும், அரிசிப்பருக்கையைக் காணாது அழுது தேம்பி நிற்போர்—கையில் கிடைத்த சம்பளம் பதினைந்துநாளைக்குத்தானே வரும் என்று ஏங்கி உளம் வீங்கி நிற்போரின துயரைத்துடைக்கும் வண்ணம், அவர்களின வயிறு எரியாத வண்ணம் உணவுப் பொருட்களை மக்களின் கைகளுக்குக் கிடைக்கச் செய்வதில்தான் இந்த அரசின் எதிர்காலம் இருக்கிறது.

இந்த மந்திரி போய், தேர்தல் தந்திர முறைகளில் தேர்ந்த எஸ். கே. படீல் மந்திரியாக வந்தாலும், அல்லது வேறு யார் வந்தாலும், காய்கின்ற கும்பி நிறைந்தாக வேண்டும்.

உணவுப் பொருட்களின் விலை ஏறுகின்ற வேகத்தைப் பார்க்கும்போது உணவுப்பஞ்சம் பரவலாக இந்த நாட்டை விழுங்கி ஏப்பமிடக் காத்திருப்பதை உணர்கிறோம்.

இப்புறம் திரும்பி ஆட்சியாளர்களின ஆளும் திறமையை நோக்கும்போது சரிந்துபோனவர் சரித்திரம் நினைவிற்கு வருகிறது, 'அழிவுச் சாயை' அவர்கள் முகத்திலே படர்கிறது! ஏன்?

நாட்டிலே கடும்பஞ்சத்தின் காலடி ஓசை கேட்கிறது!

எரிமலையின் மேற்பாகம் வெடிப்பு விடுகிறது!

புயற்காற்று வருகிற குறிகள் தென்படுகின்றன!

— இந்தப் பயங்கரங்கள் தோன்றிவிட்டால்—பஞ்சம் தலை தூக்கிவிட்டால், வீட்டிலேபிணம்; ரோட்டிலே பிணம்; நடுக்காட்டிலே பிணம் — எனப் பட்டினி விழுங்கிய பிணங்களின் கணக்குகள் அதிகரித்துவிட்டால், மரண ஏடுகள் மிக விரைவாக நிரம்பி வரும் நிலை ஏற்பட்டுவிட்டால்,....

ஆளவந்தாரின் கொடிமரம் சாயும்!

கோட்டை கொத்தளங்கள் பொட்டல் காடுகளாகும்!

மகிழ்ச்சி கீதங்கள், மரண ஓலங்களாக மாறும்!

—இந்தக் கவலைதான் அவர்களின் முகத்தில் தெரியும் 'சாயை'!

இந்தக் கவலைதான் ஒரு மந்திரியை விரட்டி இன்னொரு மந்திரியைப் போடும் நாடகம்!

—அடியார்

நிகழ்காலத்து உதாரணங்கள்!

குண்டூரில் இது நடந்தது.

கூட்டுறவு சங்கத்தின் கதவு உடைக்கப்பட்டது!

என்றால், கதவை உடைத்தது யார்? இச்சட்ட விரோதச் செயலைச் செய்தது யார்? கொள்ளைக்காரனும், திருடனும் செய்யும் காரியத்தைத துணிந்து செய்தது யார்?

அதுவும் பட்டப்பகலில் கதவு உடைத்து உட்புகுந்த கூட்டம் எது? அதன் தலைவர் யார்?

அரசாங்க ஆதரவு பெற்ற ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ.! ஆம்; சட்டமன்றத்தில் உட்கார்ந்து சட்டமியற்றும் சட்டமன்ற உறுப்பினர்தான் எந்த சட்டமும் அனுமதிக்காத அந்தக் காரியத்தைச் செய்தார்!

ஏன் செய்தார்? அந்த ஊரில்—அந்தக் கூட்டுறவு சங்கத்தை நடத்தி வருபவர்களும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தாம்! என்றாலும், இப்போது ஆளுகின்ற கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் அல்ல; வேறு கோஷ்டியினர்.

அந்த வேறு கோஷ்டியினரின் பலம் அந்த ஊரிலே அதிகரித்தது போலவே, அந்த மாநிலத்திலும் அதிகரிக்கவே ஆளும் கட்சியனர் சீற்றம் கொண்டனர்!

அந்தக் 'கோஷ்டி' நடத்திவரும் கூட்டுறவு சங்கத்திற்கு ஆளும் கட்சியின் அன்பைப்பெற்ற ஒரு எம். எல். ஏ-யை தலைவராக்கினர்! தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

என்றாலும். அந்தக் கோஷ்டி கூட்டுறவு சங்கத்தைவிட்டு நகர மறுத்துவிட்டது. எனவே, பொங்கியெழந்தார், தலைவர்! 'விட்டேனுபார்'—என்று கூவி கூட்டம் சேர்த்தார்; கூட்டுறவு சங்கம் நோக்கி நடந்தார்.

கதவு பிளக்கப்பட்டது; காந்தியத்தை— அகிம்சையை— சத்தியத்தை—சட்டம் கூறும் நேர் வழியை அப்பால் தூக்கி எறிந்துவிட்டு அந்தக் காங்கிரஸ் எம். எல். ஏ பலாத்காரமாகக் கடையைக் கைப்பற்றினர்!

இதுபற்றி ஆந்திர சட்டசபையில் கேட்டபோது கூட்டுறவு மந்திரி அழகாகப் பதிலுரைத்தார்!

இந்தச் சட்ட விரோத செயலை அருமையாக வர்ணித்தர்ர்!

ஆமாம்; இந்த அநியாயச் செயலை — அதிக்ரமச் செயலை நியாயம் என்றார்.

சட்டமிருக்க—சட்டத்தை அமுல் நடத்த நீதிமன்றங்களும், போலீசும் இருக்க கதவு உடைத்து உட்புகுந்த செயலை நியாயம் எனக் கூறி நீதித்துறை வரலாற்றில் ஒரு புது அத்தியாயத்தைத் துவக்கி வைத்திருக்கிறார்!

தடியெடுத்தவன் தண்டல்காரன்!

வல்லான் வகுத்ததே வாய்க்கால்!

—அராஜகத்தை வெளிப்படுத்தும் இந்தப் பழமொழிகளின் நவீன காலத்து உதாரணங்கள் இவர்கள் தான்!

15. பாண்டியனுக்கு ஓலை

அண்ணன், எதுவும் கேட்டு விடுவதற்குமுன் தானே முந்திக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தில் தாமரை, “அண்ணா! இந்தக் கைதிக்கு திடீரென்று நெஞ்சு அடைத்து ஆபத்தாகப் போய்விட்டதண்ணா!” என ஆரம்பித்தாள்.

தங்கையைக் கோபத்துடன் நோக்கியவாறு இருங்கோவேள், “ஓகோ! கைதிக்கு ஆபத்தாகப் போய்விட்டது. உடனே காவலர்கள் ஓடிவந்தனர். உனக்கு இந்தக் கைதியின்மீது கருணை பிறந்துவிட்டது. சிகிச்சையளிக்கப் பறந்து வந்துவிட்டாய். இல்லையா?” என்று கிண்டல் செய்தான். அண்ணனின் கேலி மொழியில் ஆத்திரம் கொந்தளிப்பதை உணர்ந்து கொண்ட தாமரை, தலையைக் குனிந்து கொண்டு நின்றாள். இருங்கோவேள், செழியனைப் பார்த்து சீறினான்.

“ஏன் தம்பி; சிறைச்சாலையென்றால் உங்கள் வீட்டுப் பள்ளியறை மாதிரியா இருக்கும்? அதற்காக ஏன் மற்றவர்களுக்குத் தொந்திரவு கொடுக்கிறாய்? சாகும்வரையில் மரியாதையாகக் காலங்கழிக்கமாட்டாய் போலிருக்கிறதே!”

இதுவரையிலும் அமைதியாக இருந்த செழியன், இருங்கோவேளை மிக அலட்சியமாகப் பார்த்தவாறு “நான் யாரையும் இங்கே கூப்பிடவில்லை. என்னைக் கொல்ல வேண்டுமென்று நீ விரும்பினால் அந்த வேலையை விரைவில் முடித்துவிடு. மாறாக என் கால் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டு என் நெஞ்சை மட்டும் உசுப்பிவிடாதே!” என்று பதில் கூறவே, இருங்கோவேளுக்கு சினம் பொங்கி எழுந்தது.

“என்ன சொன்னாய்?” என்று செழியன்மீது பாய்ந்தான். ஆனால் அதற்குள் குறுக்கே தாமரை ஓடிநின்று அண்ணனைத் தடுத்து நிறுத்தி, “எதிரி நாட்டுக்காரராயிருந்தாலும் அவரும் ஒரு வீரர். அவரை இப்படி நடத்துவது நமது மறக்குலப் பண்புக்கே இழுக்கு தரும் காரியம் அண்ணா!” என்று படபடவென்று வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள். பேசி முடித்த பிறகே அவளுக்கு அச்சம் ஏற்பட்டது, அண்ணன் முன்னே ஏதேதோ கூறிவிட்டோமேயென்று.

“தாமரை! பண்புக்கு விளக்கம் அளிக்க உன்னை யாரும் இங்கே அழைக்கவில்லை. போ வெளியே!” என்று கத்தினான் இருங்கோவேள்.

“மன்னித்துக் கொள்ளவும். இதுபோல நமக்கு ஒரு நிலை ஏற்பட்டுவிட்டால் என்று சிந்திப்பதுதான் முறையண்ணா!” என்று கெஞ்சும் தோரணையில் கூறினாள் தாமரை.

“நமக்கு ஒரு நிலை! பைத்தியக்காரி, இனிமேல்தானா நமக்கு அந்த நிலை ஏற்பட வேண்டும்? இப்போது நம் நிலை என்ன? அதை எண்ணிப்பார், தாமரை; எண்ணிப்பார்! முகிலைத் தொடும் அளவு எழுந்து நின்ற நமது கோட்டை எங்கே? கொத்தளங்கள் எங்கே? கொலுமண்டபத்தில் உன் அண்ணன் வீற்றிருந்த காட்சி எங்கே? அத்தனையும் மறைவதற்குக் காரணமாக இருந்த இந்த எதிரிகளின்மீது இரக்கமாம் — கருணையாம்— பரிவாம் — பச்சாதாபமாம்!” இருங்கோவேள் எரிமலையானான்.

“கரிகாற் சோழர்தானேயண்ணா நமது எதிரி — பாண்டியர்களுக்கும் நமக்கும் என்ன பகை?”

தாமரையின் கேள்விக்கு இருங்கோவேள் பதில் சொல்வதற்கு முன்பு அவன் உதடுகள் துடித்தன. பல்லைக் கடித்துக் கொண்டான்.

“பாண்டியர்கள் — பகைவர்களல்ல என்கிறாயா? இதோ இந்தப் பாவி இல்லையென்றால் இந்நேரம் அந்தக் கரிகாலன உயிர் காற்றில் பறந்திருக்குமே — அதைத் தடுத்து நிறுத்தியது இவன் தானே—அது மட்டுமல்ல தாமரை; இதோ ஒரு புதிய சேதி சொல்லுகிறேன் உனக்கு! இன்னும் இரண்டொரு தினங்களில் பாண்டிய நாட்டுப் படை நம்மை இந்தக் காட்டுக்குள் வளைக்கப் போகிறது. பெரும் சேனை கொண்டு முற்றுகையிட்டு என்னையும் உன்னையும் ராஜ குடும்பத்தையும் கைது செய்து, இவர்களையெல்லாம் விடுவிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறது.”

—இதை அவன் சொல்லி முடிப்பதற்குள் தாமரைக்கு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. பாண்டியர்கள் படையெடுக்கப் போகிற செய்தி தந்த பயத்தை விட, அந்தச் செய்தியை செழியன் எதிரிலேயே அண்ணன் வெளியிடுகிறானே என்ற பயம் அதிகமாயிற்று அவளுக்கு. ஆனால் அந்தப் பயம் வெகு விரைவில் நீங்கிற்று. செழியன் காதில் அந்தச் செய்தியைப் போட்டதுங்கூட அண்ணனின் ராஜதந்திரம்தான் என்ற முடிவுக்கு வந்தாள்.

இருங்கோவேள் செழியனிடம் சென்று முதுகில் தட்டியவாறு, “உணர்ச்சி மிக்க வாலிபனே! உனக்கும் எனக்கும் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைத் தீர்க்கக் கூடிய சக்தி இப்போது உன்னிடம்தான் இருக்கிறது. என்ன நெருக்கடி என்று கேட்கிறாயா? நீ கேட்க மாட்டாய் — புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் பெற்றவன்தான் நீ—பெருவழுதிப் பாண்டியனின் படைகள் எங்களை வளைத்துக் கொள்ளுமேயானால் நாங்கள் நிச்சயம் தப்ப முடியாது. எங்களை வெல்வார் யாருமில்லையென்று அறைகூவல் தருகிற நிலையிலே நாங்கள் இல்லை.

“ஆனால் ஒன்று; எந்த ஒரு உயிரை மீட்பதற்காகப் பாண்டியனின் படையெடுப்பு நடக்க இருக்கிறதோ: அந்த உயிரை அவர்களால் கண்டிப்பாக மீட்க முடியாது. அந்த உயிர் உன் உயிர்தான்! நாங்கள் அத்தனை பேரும் பாண்டியர்களால் சூழப்படுகிற நேரத்தில் உன்னை உயிரோடு அவர்களிடம் திருப்பித் தருவோமா? யார்தான் தருவார்கள்? உனக்குத் தெரியாதா என்ன? அதனால் நீ உயிர்தப்புவதற்கு ஒரே ஒரு வழியிருக்கிறது—அதைச் சொல்லுகிறேன்; உன்னால் நிறைவேற்ற முடியுமா முடியாதா என்று உடனே கூறிவிடு!” என்று ஒரு சொற்பொழிவே நடத்தி விட்டான்.

என்னதான் செய்ய வேண்டுமென்று சொல்கிறான் — என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவலில், “என்ன வழி?” என்று கேட்டு வைத்தான் செழியன்.

“பிரமாதமாக ஒன்றுமில்லை. பெருவழுதிப்பாண்டியனுக்குஒரு ஓலை அனுப்ப வேண்டும். அவ்வளவுதான்!” இருங்கோவேள் சற்றுக் கனிவுடன் இந்த வார்த்தைகளை உதிர்த்தான்.

“என்ன ஓலை?”

“திருமண ஓலை!”

“திருமண ஓலையா?”

“ஆமாம்—அதுவும் உனக்குத் திருமணம் நடக்கப் போகிறது என்ற செய்தியைத் தாங்கிய ஓலை.”

“புரியவில்லை எனக்கு!”

“புரியும்படி சொல்லுகிறேன். நீயே எழுத வேண்டும் பாண்டியனுக்கு! ஓலையில் குறிப்பிடப் படவேண்டிய முக்கிய வரிகள் எவை தெரியுமா?”

“எவை?”

“பாண்டிய மன்னர் அவர்களே! என்னை மீட்பதற்காகப் பெரும் படை திரட்டி வரப் போவதாகச் செய்தி கேள்விப்பட்டேன். என்னை மீட்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லாமற் போய் விட்டது என்பதை இந்த ஓலை வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இப்போது இருங்கோவேளின் உற்ற துணைவனாக மாறிவிட்டேன். பாண்டியப் பேரரசு இந்த உறவின்மூலம் எனக்குப் பகையாகிறது.”

“ஆ! என்ன சொன்னாய்?”

“பதறாதே செழியா! முழுவதையும் கேள்! இனிமேல்தான் இன்பமான சேதியே வரப் போகிறது.”

“போதும்—போதும் — என் காதில் தேள்களை நுழைய விடாதே. தயவுசெய்து போய்விடு மன்னா—போய்விடு!”

“இதையும் கேள் தம்பி! ‘பாண்டிய மன்னரே! உம்மீது எனக்குப் பகை வளர்ந்த காரணத்தை அறிய விரும்புகிறீரா?

மனிதனின் கதை

✻

தொடர்கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

என் திருமணத்திற்கென ஏற்பாடு செய்து அதைத் திடீரென நிறுத்தி விட்டீரே; அதன் தொடர்ச்சிதான் இப்போது நமது உறவை முறித்து விட்டது. அன்றொருநாள் சித்திரத்தில் காட்டிய பெண்ணை இங்கே இருங்கோவேளின் வீட்டில் நேரிலே கண்டேன். கண்ட பிறகு என்ன நடக்கும் என்று தங்களுக்குத் தெரியாதா என்ன? இருங்கோவேள் இப்போது என் மைத்துனர். ஆமாம் அரசே! வேளிர் குலவிளக்காம் தாமரையை நான் மணப்பதென்று தீர்மானமாகி விட்டது!"

இருங்கோவேளின் பேச்சு செழியனுக்கும் தாமரைக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இருவரும் இருங்கோவேளையே பார்த்தபடி நின்றார்கள். அண்ணன்தான் பேசுகிறானா?—என்று சந்தேகப் பட்டாள் தாமரை. உண்மையிலேயே அண்ணனுக்கு இப்படியொரு எண்ணமிருக்கிறதா? அல்லது தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்வதற்கு செழியனை துரோகியாக்க முடிவு செய்திருக்கிறானா? அவளுக்கு ஒன்றும் புரியவில்லை, ஆனால், ஏதோ ஒரு ராஜதந்திரத்தை மிக அழகாகக் கையாளுகிறான் அண்ணன் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டாள்.

செழியனுக்கு ஒரே குழப்பம். எதிர்பாராத வாசகங்களைக் கேட்டு அப்படியே நின்று கொண்டிருந்தான். இருங்கோவேள் உண்மையிலேயே தனக்குப் பெண் கொடுத்து உறவு கொண்டாட விரும்புகிறானா? அல்லது தன்னையும் ஏமாற்றி பாண்டியரையும் ஏமாற்றி தான் வெற்றி பெறச் சூழ்ச்சிகள் செய்கிறானா? ஒருவேளை, தாமரையைத் தனக்குத் திருமணம் செய்து கொடுக்க அவன் வலிய முன்வந்து விட்டால் என்ன செய்வது? சே! சே! எதிரியின் வீட்டிலா தொடர்பு? அழகிதான் அவள். அதற்காக; அவன் துரோகியாகி விடுவதா? முடியாது! முடியாது! இதிலிருந்து ஏதோ ஒரு முக்கிய காரணத்தால் பாண்டியனுக்கும் இருங்கோவேளுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு தனக்கும் தாமரைக்கும் நடந்திருக்க வேண்டிய திருமணம் தடைப்பட்டுப் போயிற்று என்பதை மட்டுமே குழப்பத்திற்கிடையே செழியனால் கண்டுபிடிக்க முடிந்தது. இருங்கோவேளின் பேச்சில் புதைந்து கிடக்கும் இணையற்ற தந்திரத்தைக் கண்டு செழியன் ஆச்சரியப்பட்டான். ஏன் அந்தத் தந்திரத்தைத் தனக்கும் தன் நாட்டுக்கும் சாதகமாக ஆக்கிக் கொள்ளக்கூடாது என்ற கேள்வி எழுந்தது அவன் உள்ளத்தில்.

இருங்கோவேள் கூறுவது போல ஒரு கடிதம் எழுதினால் அது பாண்டியரிடம் செல்லும். பாண்டியர் அதைப் படித்ததும் செழியனைத் துரோகி என்று தூற்றுவார். படையெடுப்பு நின்றுவிடும். அதன் காரணமாக செழியனின் உயிர் காப்பாற்றப்படும். இப்போது எப்படியோ சாகாமல் தப்பித்துக் கொண்டால் எவ்வாறேனும் இருங்கோவேளிடமிருந்து விடுபட்டு பாண்டியரிடம் உண்மையைக்கூறி, துரோகியல்ல என்று நிரூபித்துவிடலாம்.

இந்தச் சிந்தனை செழியனுக்கு ஒரு புதிய தெம்பை அளித்தது என்றே கூறவேண்டும். அதோடு அவனுக்கு மற்றுமொரு சந்தேகம். இருங்கோவேள், தன் தங்கை தாமரையைத் தனக்கு உண்மையிலேயே திருமணம் செய்து வைக்கச் சம்மதிப்பானா என்பதே அது. அதையும் கேட்டு விடலாம், அவன் மனதை ஆராய்ந்து விடலாம், என்ற கருத்தோடு அவனைப் பார்த்து, "உன் இஷ்டப்படியே பாண்டியருக்கு ஓலை எழுதுகிறேன். அதே போல் தாமரைக்கும் எனக்கும் திருமணம் நடைபெறுமா?" எனக் கேட்டான்.

அவனது துணிச்சலான கேள்விக்கு இருங்கோவேள் சட்டென்று பதில் சொன்னான்.

"தாராளமாக நடைபெறும். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது."

"என்ன நிபந்தனை?"

"அப்படியொன்றும் பயங்கரமானதல்ல; அதெல்லாம் நிச்சயம் செய்யும்போது கூறுகிறேன். இப்போது நெருக்கடியைத் தவிர்த்துக்கொள்ளலாம். என்ன சொல்கிறாய்? உதவி புரிகிறாயா? ஆனால் இந்த உதவி, உன் உயிருக்கும் சேர்த்துத்தான் என்பதை மறந்துவிடாதே!"

"உதவி செய்கிறேன். ஒரு சிறு நிபந்தனை. என்னை இந்த சித்திரவதைக் கூடத்திலேயிருந்து மாற்றி, வேறு ஒரு நல்ல இடத்தில் பூட்டிவைக்க வேண்டும். முடியுமா?"

"தாராளமாக! இங்கேயுள்ள இடத்தில் ஒரு நல்ல இடம் உனக்கு ஒதுக்கப்படும். சரி! இந்தா ஓலை—இந்தா எழுதுகோல்—உடனே எழுது!"

ஓலையையும் எழுதுகோலையும் பெற்ற செழியன் எழுதத் தொடங்கினான். இருங்கோவேள் கூறியவற்றை மிகச் சுருக்கமாக எழுதி முடித்து அவன் கையில் தந்தான்.

"பாண்டியர் பெருவழுதிக்கு செழியன் வணக்கம். என்னை இருங்கோவேளிடமிருந்து மீட்பதற்கு முயற்சிப்பதாகக் கேள்விப்பட்டேன். தேவையில்லை. தாங்கள் என்னிடம் மறைத்து வந்த மணமகளை யாரென்று புரிந்து கொண்டேன். இருங்கோவேளின் தங்கை தாமரைக்கும் எனக்கும் திருமணம். வேளிர்குடியில் புது உறவு. பாண்டியருக்கு நான் பகைவனாகவேண்டிய சூழ்நிலை. என்னை மறந்துவிடுக.

செழியன்."

ஓலையை வாங்கிக் கொண்ட இருங்கோவேள், 'சபாஷ்!' என்று செழியன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு கலகல என சிரிக்கத் தொடங்கினான். அந்தப் பயங்கரமான சிரிப்பு இருட்குகையெங்கும் எதிரொலித்தது.

"செழியா! சரியானபடி ஏமாந்தாய்! இந்த ஓலை பாண்டியன் படையெடுப்பதைத் தடுக்கும். ஆனால் உன் உயிர் போவதைத் தடுக்க இந்த ஓலைக்குச் சக்தி இல்லை. உன் உயிரைப் பணயமாக வைத்துக் கரிகாலனுக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். இழந்த என் நாடுகள் திருப்பித் தரப்பட வேண்டும். இல்லையேல் செழியனின் உயிர் பறிக்கப்படும். இதுதான் தம்பி மதிப்பிற்குரிய பூம்புகார் மன்னவனுக்கு இருங்கோவேளின் இறுதி எச்சரிக்கை. ஆகவே, தம்பி, எப்படியோ ஒரு வகையில் உன் உயிர் ஊசலாடிக் கொண்டுதான் இருக்கிறது" என்று இடி முழக்கம் செய்தான் இருங்கோவேள்.

செழியனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. தன் உயிரை வைத்து இரு பெருமன்னர்களை வேடிக்கை காட்டுகிற இருங்கோவேளை அப்படியே கசக்கிப் பிழிந்து விடலாமா என எண்ணி உறுமியவாறு இருங்கோவேள் மீது பாய்ந்தான். இருங்கோவேள், அவனை அலட்சியமாகத் தட்டி வீழ்த்திவிட்டு வேகமாக வெளியேறினான். தாமரையும் அவனோடு சென்றாள். போகும்போது செழியனை ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். உள்ளத்து உணர்ச்சிகளை யெல்லாம் நாக்கில் தேக்கி செழியன் பலமாக ஒரு முழக்கம் செய்தான். "வாழ்க! சோழபாண்டி மண்டிலம்!" என்ற முழக்கந்தான் அது! அந்த உணர்ச்சிப் பரணியைக் கேட்ட தாமரை செழியனின் நாட்டுப் பற்றை தனக்குத்தானே வியந்து கொண்டாள். கதவு மூடப்பட்டது. மீண்டும் இருள் சூழ்ந்தது. செழியன் இருளில் கிடந்தான்.

வெளியில் வந்த, இருங்கோவேள் தாமரையைப் பார்த்து, "என்ன சேதி? அண்ணி எப்படியிருக்கிறாள்? நீ சொன்ன அந்த ஊமை மருத்துவன் வந்தானா?" எனக் கேட்டான்.

"வந்திருக்கிறான். மருத்துவம் ஆரம்பிக்கப் போகிறான்." எனப் பதிலுரைத்தாள் அவள்.

"அவனை நமது காவலர்கள் யாரும் தடுக்காமலும் தொந்திரவு செய்யாமலும் இருக்கட்டும். அவன் இஷ்டத்துக்கு வெளியில் சென்று மூலிகைகள் தயாரித்துக் கொண்டு வரட்டும். இந்தா இந்த முத்திரை மோதிரத்தை அவன் கையில் மாட்டி விடு. அப்போதுதான் காவலர்கள் தொல்லை இருக்காது அவனுக்கு! அந்த மருத்துவனைப் பற்றி நான்கூட கேள்விப்பட்டேன். வாலிபனும். வடிவழகனும். ஊமையாக இருந்தாலும் மருத்துவத்தில் தலைசிறந்தவனும். ஊரார் சொல்லக் கேட்டேன். நீ அழைத்துவந்திருப்பவனும் நான் கேள்விப்பட்டவனாகத்தான் இருக்க வேண்டும் என நினைக்கிறேன். எப்படியோ அரசிக்கு நோய் தீர்ந்தால் போதும். அதற்கு வேண்டிய வசதியெல்லாம் அந்த மருத்துவனுக்கு செய்து கொடு! நமது அரண்மனையில் என்றால் எத்தனையோ வசதி! இங்கே என்ன செய்வது? பரவாயில்லை. நடக்கிறவரையில் நடக்கட்டும். நீ போ தாமரை!" என்றான். அவளும் போக ஆரம்பித்தாள்.

"ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். நான் அரசியிடம் வந்து பேசிக் கொண்டிருக்கும்போதோ அல்லது உன்னைக் காண வரும்போதோ அவனில்லாமல் இருப்பது நல்லது. ஏனெனில் அவன் ஒருவேளை ஒற்றனாக இருந்தால்....!" என இழுத்துக் கூறினான் அவன்.

"அப்படியெல்லாம் இல்லை. மிகவும் நல்லமருத்துவன். எதற்கும் நாங்கள் எச்சரிக்கையாக இருக்கிறோம்" என்றவாறு தாமரை அதைவிட்டு அகன்றாள். அவள் உள்ளத்தில் குதூகலம் இல்லை. ஏதோ ஒரு விவரிக்க முடியாத சங்கடம் அவளை ஆட்டிப்படைத்தது.

இருங்கோவேள், நேரே தன் இருப்பிடத்திற்குச் சென்று, அமைச்சரிடம் செழியனின் கடிதத்தைப் படித்துக் காட்டினான். அமைச்சர் விகாரமாகச் சிரித்து மன்னனின் திறமையை மெச்சினார். திறமைமிக்க ஒருவன் மூலம் உடனே ஓலையைப் பாண்டியனுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. நல்ல பலமிக்க வீரர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். அமைச்சர் அவர்களைக் கூர்ந்து கவனித்து இறுதியில் ஒருவனைத் தேர்ந்தெடுத்தார். அவன் பெயர் கொடுங்கோல்! பாண்டியனிடம் பத்திரமாக ஓலையைச் சேர்க்க வேண்டிய பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

வாழ்க இளைஞனே; வாழ்க நின் கூட்டம்!

கடந்த 22—ந் தேதி ஞாயிற்றுக்கிழமை சென்னை மெமோரியல் மண்டபத்தில் திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தின் மாநாடு சீருடனும் சிறப்புடனும் நடைபெற்றது. தி. மு. க. மாணவர் கிளை—என்றிருந்த பெயரை மாற்றி திராவிட மாணவ முன்னேற்றக் கழகம்—என்ற பெயருடன் மாணவர்க்கோர் இயக்கமாக இயங்கத் துவங்கிற்று. திரு எஸ். டி. சோமசுந்தரம் (பி. இ.) பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து, நா. ராமனுஜம் பி. காம். (ஆனர்ஸ்) ராசகுமார் பீட்டர் (பி. காம். ஆனர்ஸ்) மதுரை மாவட்டத்திலிருந்து, ப. நெடுமாறன் பி. காம். (ஆனர்ஸ்) இந்திரசித் (பி. ஏ.) தஞ்சை மாவட்டத்திலிருந்து, எஸ். சோமசுந்தரம் பி. ஏ. இளங்கோவன் பி. காம்; கோவை மாவட்டத்திலிருந்து கே. ஏ. கிருஷ்ணசாமி பி. ஏ. (ஆனர்ஸ்) எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பி. ஏ (ஆனர்ஸ்); செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து இ. கிருஷ்ணன் (பி. ஏ.); பி. பாலசுப்பிரமணியம் (பி ஏ.); சென்னை மாவட்டத்திலிருந்து என். வி. என். சோமு (பி. ஏ.); திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து, எம். கருப்பசாமி ஆகியோர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கனரகத் தொழிலா - கைராட்டையா? குழப்பச் சேற்றிலே ஆளவந்தார்கள்!

காந்தியப் பொருளாதார நிபுணர்—என்று கதர் அணிந்தவர்களால் புகழப்படும் திரு. ஜே. சி. குமரப்பா— என்பவர் ஒரு தடவை ஏதோ ஒரு திட்டக் குழுவில் கலந்து கொள்ளும் பொருட்டு டில்லி சென்றாராம். சாம்ராஜ்யங்களின் சுடுகாட்டுப் பூமியாம் அந்த டில்லியில் முளைந்தெழுந்த காங்கிரஸ் சாம்ராஜ்யக் கோட்டைக்குள், ‘டோங்கா’—எனும் குதிரை வண்டியில் அமர்ந்த வண்ணம் உட்புகுந்தார்.

அந்தத் திட்டக் குழுவில் கலந்து கொள்ளும் ஏழையரின் பிரதிநிதிகள் — காங்கிரஸ் பெருமக்கள் மெருகு குலையாத காரில் சென்று கொண்டிருப்பதைக் கண்டாராம், அவர்!

அவருடைய உள்ளம் கொதித்தது!

‘நாட்டின் ஏழ்மை நிலை தெரிந்து முண்டாசுக் கட்டையும், முழு நீளச் சொக்காயையும் வீசி எறிந்துவிட்டு கட்டிய முழங்கால் துண்டுடன் உலவிய காந்தியாரெங்கே? அவருடைய சீடர்கள் என்று கூறிக் கொண்டிருக்கும் இவர்கள் எங்கே? கலகம், கலவரம்; குழப்பம்—எங்கெங்கு முளைவிடுகிறதோ அங்கெல்லாம் கடுங்குளிரையும் கதிரவன் வெப்பத்தையும் தாங்கிக் கொண்டு கால் கடுக்க நடந்து சென்ற காந்தியார் எங்கே; ஏழை நாட்டின் திட்டம் திட்டக் காரிலேயே உலா வரும் இந்த ‘நடந்தறியாத’ காங்கிரசார் எங்கே-என்று எண்ணிய வண்ணம் அமர்ந்திருந்தார்!

“ஏய் நிறுத்து!”

—வழியில் நின்றிருந்த போலீஸ்காரன் தடுத்தான்.

“ஏனப்பா எங்களைத் தடுக்கிறாய்?” — என்று கேட்டார் குமரப்பா.

“இந்த நேரத்தில் இந்தமாதிரி வண்டிகள் இவ்வழியில் போகக் கூடாது—என்று உத்திரவு”

“ஏன்?”

“திட்டக்குழுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. பெரியவர்களெல்லாம் வந்துபோய்க் கொண்டிருப்பார்கள் காரில்! நீ குறுக்கே போய் அவர்களை இடைஞ்சல் செய்யக் கூடாது.” குமரப்பா எனும் அக் ‘காந்திய நிபுணர்’ ரத்த அழுத்த வியாதிக்காரர். எனவே, அவருக்கு சினம் பொங்கிற்று! தான் யார்—என்பதைக் கூறினார். திட்டக் குழுவின் அங்கத்தினர் தான்—என்றும் கூறினார். குதிரை வண்டி ஓரத்தில் போவதால் காரில் செல்லும் சீமான்களுக்கு நேரப்போவது என்ன?—என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

என்றாலும் போலீஸ்காரன் அசைந்து கொடுக்கவில்லை; அவனுக்கு உத்திரவு அப்படி! போலீஸ் இன்ஸ்பெக்டர் அதற்குள் அங்கு வந்து சேர்ந்தார். அவரிடமும் வாதாடினார் குமரப்பா; பயனில்லை!

ஏழை இந்தியாவின் முன்னேற்றத்திற்குத் திட்டமிடுபவர்கள் காரில்தான் செல்லவேண்டும்—என்ற நியதியைக் கண்டார்; கண்ணீர் வடித்தார்; பின்னர் பிரதமர் நேருவைச் சந்தித்த போது, தன் குதிரை வண்டி தடுக்கப்பட்ட அநியாயத்தைக் கூறினார். அவரோ சிரித்துப்பேசி மழுப்பிவிட்டார்!

—இது நடந்து கழிந்த கதை, இந்த நாட்டில்! காரில் அலுங்காமல் குலுங்காமல் சென்று திட்டம் வகுப்பவர்கள் காந்தி சொன்ன திட்டங்களை நினைவுவைப்பார்களா—என்பது சந்தேகத்திற்குரியது!

ஆலை அரசர்களின் ஆனந்த வாழ்விற்கும், நிலத் திமிங்கலங்களின் நல் வாழ்விற்கும், பணப் பெட்டிகளின் பெரு வாழ்விற்கும் தான் அவர்களின் திட்டம் இருக்கும் என்பதை மேற்கண்ட நிகழ்ச்சி அறிவுறுத்துகிறது.

குதிரை வண்டியில் வரக் கூடாதாம்!

இந்தத் திட்டம் போடுபவர்களா சேற்றிலும் சகதியிலும் சாக்கடையிலும் உலவிக் கொண்டிருக்கும் மக்களுக்குக் கை கொடுத்துக் கரையேற்றப் போகிறார்கள்?

உண்டு கொழுத்து, உறங்கி வாழ்வோர் உல்லாச வாழ்விற்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற வகையில் ‘கனரக யந்திரத் தொழில்கள்’ என்பார்கள்; அத்தனையும் தனிப்பட்ட முதலாளிகளுக்குத்தான் என்பார்கள்!

நாடு முன்னேற கனரகத் தொழில்கள் தேவை; என்றாலும் அது தனிப்பட்டவரின் கையில் கொடுப்பது பாலுக்குப் பூனையைக் காவல் வைப்பதுதானே என்று நாட்டு மக்கள் கேட்கும் போது மோன விரதம் பூணுவார்கள்; முதலாளிகளின் கையாட்கள்தான் — என்று காட்டிக் கொள்வார்கள்.

தேர்தல் வருகின்ற நேரத்தில், புள்ளி விபரங்கள் இவை—என எடுத்துக் காட்ட, புனிதர் காந்தியின் திட்டங்களை நிறைவேற்றுபவர்கள் என்று கூறிட அவ்வப்போது சிற்சில ‘காந்தியப் பொருளாதாரத் திட்டம்’ செப்புகின்ற சில திட்டங்களை நிறைவேற்றிக் காட்டுவார்கள்!

மேல் நாட்டு வழியில், மேன்மைத் தொழில்களை உண்டாக்குவார்கள் ஒருபுறம்!

கீழ் நாட்டு, பழங்கால வழியில், குடிசைத் தொழில்களை ஊக்குவிப்பார்கள் ஒருபுறம்!

ஆனால் அவர்களுக்குத் தெரியும் இவைகளில் ஒரு தொழில் வளர்க்கப்பட்டால் இன்னொரு தொழிலுக்கு ஊக்கம் ஊட்டக் கூடாது—என்று!

புதுப்புது மில்கள் ஒரு பக்கம் உருவாக்கிக் கொண்டேயிருக்கும், அரசாங்க அனுமதியுடன்!

கிசான் ராட்டை, மகன் ராட்டை அம்பர் ராட்டை என கையால் இயங்கும் ராட்டைகள் பெருகிக் கொண்டே இருக்கும், அரசாங்க ஆதரவில்!

அரிசி அரைக்கும் மில்கள் ஆயிரமாயிரம் தோன்றிக் கொண்டிருக்கும்!

‘கைக்குத்தல் அரிசி சாப்பிடுங்கள்’—என்று சம்பளம் பெறும் அரசாங்கத் தொண்டர்களால் பிரச்சாரம் செய்யப்படும்.

இயந்திரச் செக்குகள் அதிகமாகிக் கொண்டேயிருக்க வழி செய்வார்கள், அரசாங்கத்தினர்!

ஒற்றைமாட்டுச் செக்குகள் நாட்டில் பெருகிட மான்யமும் அளித்துக் கொண்டிருப்பார்கள்!

—இப்படி இரு துருவமென இருக்கும் — ஒன்றுக்கொன்று முரண்பட்ட தொழில்களை வளர்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.

அப்படியென்ன இந்த இரண்டு தொழில்களும் நேச பாவத்துடனா வளர்கிறது?—இல்லையே! மற்றது வளர்ந்தால் தாங்கள் வளர்வதற்கில்லை—என்பதை வெகு தெளிவாக தொழிலை நடத்துவோர் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆலை அரசர்களின் — பணப் பெட்டிகளின் தயவிற்காக கனரகத் தொழில்கள்!

காந்தியாரின் பொதுப்பணியை மனதில் வைத்துக்கொண்டு இந்தக்காங்கிரசிற்கு ஓட்டுப் போடும் அப்பாவி மக்களை ஏமாற்றுவதற்காக காந்தி சொன்ன கைத்தொழில்கள்!

இப்படிப்பட்ட குழப்பத்தில் ஆழ்ந்திருக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கு அடிக்கடி வீழ்ச்சிச் செய்திகள் தரும் தொழில் கடைசியில் செப்பிய கைத்தொழில்கள் தான்!

இத்தொழில்களில் நடத்தப்படும் ஆராய்ச்சி, கடலில் கரைத்த பெருங்காயம்தான் என்பதை அவ்வப்போதைய கைத்தொழிலின் வளர்ச்சி காட்டிவருகிறது.

ராட்டைத் தொழிலுக்காக அவர்கள் செலவிட்ட தொகையில் பெரும்பங்கு வீணாகும்!

செக்கு, சோப்பு, கைக் குத்தல் அரிசி ஆகியவற்றில் தொழிற் கருவிகளின் ‘முன்னேற்றம்’ சர்க்கார் பணத்தைக் கோடி கோடியாக விழுங்கி ஏப்பமிட்டிருக்கிறது. புதுப்புது ஆராய்ச்சிகள் என்ற பெயரால் பொதுமக்களின் பணம் வீணடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ‘வீண்விரயப் படலத்தின்’ ஒரு பகுதி அண்மையில் கூட நடைபெற்றது.

“கோடிக்கணக்கில் செலவிட்டு அணைகளுக்குப் பக்கத்தில் மின்சார உற்பத்தி நிலையம் வைக்கிறார்களே. அது வீண். இதோ எங்களைப் பாருங்கள். மாடுகள் உதவியாலேயே மின்சார உற்பத்தியைச் செய்து காட்டுகிறோம். இப்புதிய திட்டம் வெற்றி பெறுவது உறுதி. பின்னர் நாட்டில் மாடு இருக்குமிடத்திலெல்லாம் மின்சாரம் பிறப்பது உறுதி! மின்சாரம் பிறந்தால் கிராமங்களிலேயே தொழில்கள் நிறுவிக் கொள்ளலாம்! பின்னர் நாடு செழிக்கும்! நலம் கொழிக்கும்”—என்று தேனூறப் பேசினர்!

வடநாட்டில், ‘குதுப்’—எனும் பகுதியில் இந்தப் புதிய சோதனை உருவாக்கப்பட்டது!

இந்த சோதனைக்கு பிரச்சார சேனையே ஒன்றிருந்தது. லட்சக் கணக்கில் செலவிட்டு மின்சார உற்பத்தி செய்வதைக் கேலி செய்தனர்; கண்மூடிகளின் செயல் என்று கூறிக் களித்தனர்.

கடைசியில்...தோல்வி!

முழுத் தோல்வி! மாடுகளின் துணைகொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் முயற்சி வீண் முயற்சி என முடிவாயிற்று; அத்திட்டம் கைவிடப்பட்டது.

இந்தப் படிப்பினை மூலம் இந்த மாதிரி ‘கோமாளித் திட்டங்களைக் கைவிடுவார்களா? — என்றால் தேர்தல் இருக்கிறதே—என்ற பதில்தான் கிடைக்கும்!

தேர்தலில் நிற்கும்போது மாத்திரம் காங்கிரஸ் பணம் செலவு செய்வதில்லை. பதவியில் இருக்கும்போது அடுத்து வரும் தேர்தலுக்குப் பணம் எனும் உரமிட்டு விடுகிறார்கள் என்பதை மட்டும் அவர்களின் செயல் உணர்த்துவதில்லை!

பணக்காரர்களின் பயங்கரப் பார்வை எங்கு தோன்றி விடுமோ? — என பயந்து கொண்டு கனரகத் தொழில்களையும், தேர்தலை நினைத்துக் கொண்டு கைத்தொழில்களையும் வளர்க்கிறார்கள்; குழப்பக் குட்டையில் சிக்கித் தத்தளிக்கிறார்கள் என்பதையும் மேற்கண்ட நிகழ்ச்சிகள் நமக்கு அறிவுறுத்துகின்றன!

வாகினி படப்பிடிப்பு நிலையம், விஜயா படத் தயாரிப்புக்குழு முதலிய நிறுவனங்களின் அதிபரான திரு. நாகிரெட்டியின் மைந்தர் பி. வேணுகோபாலன் அவர்களுக்கும், பி. பத்மாவதி அவர்களுக்கும் 7—8—59 அன்று திருமணம் நடைபெற்றது.

அன்புள்ள ராஜாராம் அவர்களே!

தங்களை மொட்டையாகத் தலையுமின்றி வாலுமின்றி அழைப்பதற்காக வருத்தப்படமாட்டீர்கள் என நம்புகிறேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்று அழைக்கலாம். அந்தோ—பரிதாபம்; அந்தப்பதவியும் வெந்நீரில் போடப்பட்ட பட்டுப் பூச்சியின் கூடுபோலக் கழன்றுகொண்டிருக்கிறது எனக் கேள்விப்பட்டு அந்த அடைமொழியை விட்டுவிட்டேன். தாங்கள் விரும்பும் "நாயுடு" எனும் ஜாதி வாலை ஒட்டவைக்கவும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. அதனால்தான் தாங்கள் சாகிற வரையில் 'நிலைக்கக்கூடிய தங்கள் பிதுரார்ஜிதப் பெயரை மட்டும் குறிப்பிட்டேன்.

தங்கள்பெயர் என்ன சாமான்யமானதா? "ரகுபதி ராகவ ராஜாராம்!" என்று காந்தியடிகள் தங்கள் பெயரை அடிக்கடி உச்சரித்த மகிமையின் காரணமாகத்தானே தமிழ்நாடு காங்கிரஸ் பதவி எனும் கிரீடத்தை குருவித்தலையில் பனங்காய் வைத்ததுபோலத் தங்கள் தலையில் வைத்தார்கள்! அந்தக் கிரீடத்துக்கு வரப்போகிற அடுத்த வாரிசைப்பற்றிக் கேள்விப்படும்போது, தாங்கள் வளர்த்து வரும் "அரசியல் நாகரீகத்"தைத் தொடர்ந்து நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலை உருவாகியே தீரும் என்று நான் யூகிக்கிறேன்.

தாங்கள் மிகப்பெரிய திறமைசாலி! அதற்கு ஒப்புயர்வற்ற எடுத்துக்காட்டுத்தான் சென்னை நகராட்சித் தேர்தல் என்று காங்கிரஸ் வட்டாரத்தில் எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். திறமை மட்டுமா? தீந்தமிழ்ச் சுவை சொட்டச் சொட்ட தாங்கள் ஆற்றிடும் சொற்பொழிவுகள்.... அடடா! 'கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியுஞ் சொற்களை' எங்குதான் பொறுக்கினீர்களோ; தெரியாது!

"சென்னையில் கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள் தி. மு. க. வுக்கு வாக்களித்தனர்!"

—இது தங்கள் பெருவாய் சிந்திய திருவாசகம்!

"அண்ணாதுரை கோஷ்டிக்கு 'ரோமாபுரி ராணிகள்'தான் எழுதத் தெரியும்."

—அந்தப் புத்தகத்தை அம்மையார் படிக்கக்கேட்டு, "அய்யோ; அங்கே பிறக்கவில்லையே நான்!" எனப் பெருமூச்சு விட்டதை மறந்துவிட்டு மேடையில் பேசும்போது குறிப்பிட்ட அபூர்வக் கண்டுபிடிப்பு!

"திராவிடநாடு கேட்பவர்கள் சினிமாக்காரர்கள்!"

—இது, தங்கள் அரசியல் மேதாவிலாசத்தைக் காட்டக்கூடிய பொன்மொழி! (இங்கே பொன் என்பது காக்காப்பொன்னைக் குறிக்கும்.)

இப்படியொரு நல்ல நாகரீகமான பாணியை எழுத்தில், பேச்சில், செயலில் காட்டிய தீராதி தீரரே! தங்கள் சீடகோடிகள், தொண்டரடிப் பொடியாழ்வார்கள் அத்தனைபேரும் தங்களைப் பின்பற்றி நடைபயிலுங்காட்சியை நாடு கண்டு சிரிக்கிறது! (இங்கே 'சிரிக்கிறது' என்ற சொல்லை 'மகிழ்கிறது' என்று திருத்திக் கொள்வீராக.) தங்களின் தளபதியாக விளங்கும் அரியலூர் அழகேசன் மன்னரின் கட்டளையை மண்டையிற் சுமந்து குண்டர்கள் படையைக் குவித்திடும் செயலை நாடு உன்னிப்பாக (அதேநேரத்தில் புலியென உறுமியவாறு) கவனித்துக் கொண்டுதானிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் அழகேசனின் அரசியல் திருவிளையாடல்கள் அத்துமீறிப் போகின்றன என்று அமைச்சர்களே ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக்கொள்கிறார்களாம்; அதைப்பற்றித் தாங்களும் கவலை கொள்ள வேண்டாம். தங்கள் தளபதியும் பொருட்படுத்தத் தேவையில்லை.

"வட நாட்டார், தென்னாட்டாரை எந்த இடத்தில் சுரண்டுகிறார்கள் என்று காட்டினால், உடனே நான் போய் அந்தச் சுரண்டலை நிறுத்துகிறேன்!" என்று குளிக்கரை யென்னும் குக்கிராமத்தில் கொக்கரித்திருக்கிறார், அழகேசன்!

அரியலூரில் கவிழ்ந்த ரயிலைத் தடுக்க முடியாத வீரர் — எந்தத் தண்டவாளத்தில் பழுது — எந்தப் பாலத்தில் பலஹீனம் — எந்தப் பகுதியில் வெள்ளம்—என்பதைப் புரிந்து கொள்ள முடியாத விவேகி — சுரண்டுகிற இடத்தைச் சுட்டிக் காட்டு என அழைக்கிறார். அவர் அழைக்கும்போது அவரிடம் 'சுரண்டப்பட்ட இடத்'தைத்தான் நான் காட்ட விரும்புகிறேன். எந்த இடம் அது—எனக் கேட்பீர்கள்? அந்த இடம் அழகேசரின் தலையின் உட்பாகமேதான்!

என்னப்பா, என்றுமில்லாத கோபத்தோடு கடிதம் எழுதுகிறாய் எனக் கேட்கிறீர்களா? கோபம் ஒன்றுமில்லை எனக்கு! உங்கள் காங்கிரஸ் கட்சி, எங்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை சற்றே கவனியுங்கள்.

புதுவையில் தி.மு.க. தோல்வி கண்டது தங்களுக்கே தெரியும்; சென்னையில் — இருந்ததை நீங்கள் இழந்ததுபோல் புதுவையில் நாங்கள் எதையும் இழந்துவிடவில்லை. மாறாக, இல்லாததைப் பெற்றிருக்கிறோம்.

அன்றொரு நாள், 1945ல் புதுவையில் மாநாடு நடத்த இயலாது அடிக்கப்பட்டு, உதைக்கப்பட்டு, மண்டை உடைக்கப்பட்டு ஓடிய நாங்கள், இன்று எம்மிடமும் பத்தாயிரம் தெளிவுள்ளோர் உண்டு எனக் காட்டிடும் நிலையில் அங்கு வளர்ந்திருக்கிறோம். ஆகவே, தோல்வியால் நாங்கள் துவண்டுவிடவில்லை. அந்த உண்மையை உணராத தாங்களும் தங்கள் சீட கோடிகளும் பூவிருந்தவல்லியில் கழக மாநாடு நடக்கிறதென்றால் அதற்கு எதிர்ப்பு அறிக்கை வெளியிடுகிறீர்கள்.

பாண்டிச்சேரியில் மாண்டொழிந்த
தி. மு. க. வுக்கு பூவிருந்தவல்லியில்

கருமாதி

●●●

புரோகிதம்	—	அண்ணாதுரை
சங்கு	—	நெடுஞ்செழியன்
ஓத்து	—	கருணாநிதி
பிலாக்கணம்	—	கண்ணதாசன்

—என்றதோர் துண்டு வெளியீடு கண்டேன். அந்த வெளியீட்டுக்கு மறுப்புத் தரும் விதத்தில், கழகம் வெளியிட்டிருக்கும் துண்டு வெளியீட்டைத் தாங்கள் கண்டீர்களோ இல்லையோ; எதற்கும் இதோ—படித்துப் பாருங்கள்:

கேலி பேசிடும் சீலர்களே!

உமது சேதி கூறுவோம் கேளீரே!!

★

புதுவைத் தோல்வி கண்டு
தி. மு. க. கருமாதி
எனக் கூறும் காங்கிரசே!

சென்னை நகராட்சித் தேர்தலில்
63 இடங்களில்
உனக்குக் கருமாதி நடந்த கதை மறந்தாயோ?

அப்போது

புரோகிதம்	....	காமராசர்
சங்கு	...	பக்தவத்சலம்
பிலாக்கணம்	....	கக்கன்
மாரடித்தழ	...	மாணிக்கவேலர்
வாய்க்கரிசிபோட	...	வெங்கட்ராமன்

என்றெல்லாம் கேலி செய்ய வழி இருந்ததே—
செய்தோமா?

★

அரியலூர் அழகேசன் தோற்றாரே அன்று—
கருமாதி நடத்தினீர்களா?

புரோகிதம்	—	யார்?
சங்கு	—	எவர்?
பிலாக்கணம்	—	யார்?

பொன்னேரியில் தோற்றாரே பக்தவத்சலம்—
அன்று கருமாதி நடத்தினீரோ?

யாரய்யா	—	சங்கு?
எவரய்யா	—	புரோகிதம்?

சொல்லுங்களேன்; கேட்போம்!

★

பொல்லாத வெற்றியோ புதுவையில்?

'கள்ளுக்கடையை மூடமாட்டோம்'—
என்றார், காமராசர்!!

அள்ளிப்போட்டனர் ஓட்டுகளை
காரை, புதுவையில்!!

இப்படிப் பெற்ற வெற்றிக்குக் கொண்டாட்டம் ஒரு கேடா?

★

ஊருக்கெல்லாம் மதுவிலக்கு உபதேசம்—
ஓட்டுக்காக 'மொந்தை'மீது விசுவாசம்—

கேலி பேசிடும் சீலர்களே!
உமது சேதி இதுதானே, யாரறியார்?

★

புதுவையில் 'பூஜ்யம்' என ஏசிப் பூரிப்படைவோரே!
முதுமொழி அறிவீர்—
'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்'

——தி. மு. க.

[தொடர்ச்சி பக்கம் 12]

சுழல் விளக்கு

மாலுமி

மலரழகன்; செம்பியம்.

(?) அண்ணா மலர் விளம்பரத்தில் 'எங்கள் அண்ணா' என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே; அண்ணா உங்களுக்கு மட்டும் தான் சொந்தமா?

இல்லை நண்பரே; மலரைத் தொடுகிறவர்கள் ஒவ்வொருவருமே 'எங்கள் அண்ணா; எங்கள் அண்ணா' என்று பெருமையால் பூரிப்பார்களே என்ற காரணத்தினால்தான் அப்படிக் குறிப்பிட்டிருந்தோம்.

என். ஆர். ராஜா; செங்கற்பட்டு.

(?) இளைஞர் காங்கிரஸ் என்பது எங்கே இருக்கிறது? அதன் விலாசம் என்ன?

விலாசம் தெரியாது; பல வண்ணச் சுவரொட்டிகளில்—இலட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்களில் அது வாழ்கிறது!

பி. கருப்பையா; புதுடெல்லி.

(?) "உண்ணாவிரதம் பற்றி அவசரத் தீர்மானம் கொண்டு வந்தால் அனுமதிக்கமாட்டேன்" என்று பாராளுமன்றத்தில் மன்றத் தலைவர் அனந்தசயனம் பேசியிருக்கிறாரே....?

'உயிர்போகிற பிரச்சினைகளைப் பற்றி எங்களுக்கு என்ன கவலை' என்கிற அவரது மனப்போக்கின் பிரதிபலிப்பாக இருக்கலாம்; உள்ளத்தில் இருப்பதுதானே ஊதட்டில் இடம் பெறும்!

டி. சுந்தரம்; ஆரணி.

(?) நேருவை அயல்நாட்டுக்காரர்கள் ஆச்சரியத்துடன் சூழ்ந்து நின்று பார்க்கிறார்களாமே; ஏன்?

பேசும் பதுமைகள் நம் கவனத்தைக் கவர்வதில்லையா; அது போலத்தான்!

க்ரியமால், மதுரை.

(?) பஞ்சசீலத்தின் பேச்சே இப்போது ஏன் அடிபடுவதில்லை?

பஞ்சசீலத்தை அடிக்கடி இந்தியாவுடன் பறைசாற்றி வந்த சீனா பஞ்சன்—லாமா, தலாய்—லாமா தகராறில் இறங்கியதால் நெருங்கிய நட்பு பாழாகிவிட்டது. 'இந்தி-சீனி பாய்; பாய்!' கோஷம் மங்கிவிட்டது. மற்ற பஞ்சசீல நாடுகளோ ஜனநாயகப் போர்வையைத் தூக்கியெறிந்துவிட்டு, சர்வாதிகார உடையை மாட்டிக்கொண்டன. இனி அவைகளிடம் போய் எதைக்கூறுவது—என்ற நினைப்பில் பஞ்சசீலத்தை மறந்துவிட்டது இந்தியா! இனிஏதாவது புதுக்கோஷம் கிளப்ப, பழம் வேதப் புத்தகங்களிடையே ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறது!

சி. வேலுத்துரை, எழும்பூர்.

(?) நாட்டின் நலம் பேணும் உண்மையான காங்கிரஸ் தியாகிகள் யாராவது இருக்கிறார்களா?

இரண்டுபேர் இருந்தார்கள்! ஒருவர் வடநாட்டில் பிறந்தவர்; இன்னொருவர் தென்னாட்டில் பிறந்தவர் முன்கூறியவர் 'காங்கிரசைக் கலைக்க வேண்டும்'—என்று கூறிய சில நாட்களுக்குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டார், மகாத்மாவாயிருந்தும்! பின்னவரான சங்கரலிங்கனார் 'காங்கிரஸ் ஆட்சி திருந்தவேண்டும்' — என்று கூறியதன் பொருட்டு பட்டினியாக இருந்து சாகும்படி விடப்பட்டார்!

டி. பக்கிரிசாமி, மணியாச்சி,

(?) தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவி வேண்டுமென்பவர் என்னசெய்யவேண்டும்?

கற்றதை மறந்துவிட வேண்டும். கழகத்தை 'நானாவித பாஷை'யிலும் திட்டத்தெரிய வேண்டும். இதற்கெல்லாம் மேலாக வடவர்களைக் கண்டால், சப்த நாடிகளையும் ஒடுக்கி அடக்கமாக நடக்கத்தெரியவேண்டும்!

சேசையன்; உறையூர்.

(?) நேரு அடுத்த தடவை ரஷ்யா சென்றால்...?

ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறுத்தப்படும்! ரஷ்யாவில் இப்போது அமுலாகி வரும் ஏழாண்டுத் திட்டங்கள் இந்தியாவில் மறு பிறப்பெடுக்கும்!

வெற்றிவேந்தன்; உடுமலை.

(?) சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்கள் அமுலாக்கப்படும்?

'அப்பன் தொழிலையே மகன் செய்ய வேண்டும்' — இப்படி ஆச்சாரியார் சட்டம்செய்வார். 'எல்லோரும் பருத்திக் கொட்டை சாப்பிட வேண்டும்' —என்று மசோதா கொண்டு வருவார் முன்ஷி. 'முதலாளிக்கு வரிபோடாமல் சுதந்திரமாக இருக்கவிட வேண்டும்,—என்ற தீர்மானத்தை நிறைவேற்றுவார், சுதந்திரக் கட்சியின் 'மனு'மசானி!

ராமன் நாயர்; ஒலவக்கோடு.

(?) ஜனாதிபதி நிர்வாகத்தில் கூட காங்கிரஸ் தலையிடுவதாக கேரள கம்யூனிஸ்ட் குறை கூறுகிறதே?

ஜனாதிபதி யார்? காங்கிரஸ்காரர்! அவர் பெயரைச் சொல்லி ஆளும் கவர்னர் யார்? அவரும் காங்கிரஸ்காரர்! இந்த இரண்டு பேருக்கும் 'ஆளுகின்ற சான்ஸ்' — கொடுத்தது யார்? காங்கிரஸ்காரர்கள்! எனவே, அவர்கள் ஆட்சியில் அவர்கள் தலையிடுவதில் என்ன தப்பு?

சின்னச்சாமி; புளியம்பட்டி.

(?) இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்து விட்டதாமே?

குறையாமல் என்ன செய்யும்? இந்த டம்பாச்சாரியர்கள் ஆட்சியில் ரூபாயின் மதிப்பென்ன, மனிதனின் மதிப்பே, மனித உயிரின் மதிப்பே குறைக்கப்பட்டிருப்பதை சேரிகளில் காணலாமே, தோழரே!

சி. கருப்பண்ணன்; பல்லடம்.

(?) நம்வள நாட்டின் திறவுகோல் யாரிடமிருக்கிறது?

திறவுகோல் நம்மிடம்தான் இருக்கிறது! ஆனால், அந்தத் திறவு கோலுக்குரிய மாளிகையில் குடியிருப்பது நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் ஏகாதிபத்யம்! பட்டயம் இருந்தென்ன பயன்; பயன் பெறுபவன் வேற்றானாகத் தானே இருக்கிறான்?

முதலாளிகளின்...

[11—ம் பக்கம் தொடர்ச்சி]

இந்த நிலையில், புதிதாக விதிக்கப்படுகின்ற வரிகளையும் இந்திய முதலாளிகள் தங்களது சொந்த இலாபத்திலிருந்து தருவதில்லை. பொருள்களின் விலையை அவர்கள் உயர்த்திவிடுவதின் காரணமாக பொருள்களை வாங்கும் கடைநிலையிருப்பவர்களே புதிதாகப் போடப்படும் வரிகளை மறைமுகமாக கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இப்படி வரிப்பளுவு சாதாரண பொதுமக்கள் மீது விழுவதோடு மட்டுமல்லாமல் அவ்வரிப் பளுவிலிருந்தும் முதலாளிகள் தந்திரமாக தப்பித்துக் கொள்ளுகின்றனர்.

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து, இந்திய முதலாளிகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாக இலாபம் அடைகின்றனர்; வரிப்பளு அவர்களைப் பாதிப்பதில்லை: வரியும் வேறு நாடுகளை விடக் குறைவு என்ற மூன்று பெரும் உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்ட அனுகூலமான நிலைமைகளை இந்திய முதலாளித்துவம் தொடர்ந்து அனுபவித்து வர காஙகிரஸ் சர்க்கார துணை நிற்கின்றது. இந்தச் சாதகங்களோடு, பற்றாக்குறை நெருக்கடிகளை போலியாகத் தோற்றுவித்து சீனித்தொழிலில் கடந்த ஐந்துமாத காலத்தில் 16 கோடி ரூபாயை பொதுமக்களிடத்திலிருந்து சுரண்டிக் கொழுத்ததைப் போல இந்திய முதலாளிகள் பல்வேறு தொழில்களிலும் கொள்ளையடித்து வருகின்றனர்.

இவ்வேதனையை விரட்டியடிக்க ஜவர்கலால் நேரு ஏதும் செய்யவில்லை. கறுப்புச் சந்தைக்காரர்களை—கொள்ளை இலாப வேட்டைக்காரர்களை விளக்குக் கம்பங்களில் தூக்கிலிடுவேன் என அவர் ஒரு காலத்தில் முழங்கினார். முதலாளித்துவ தீமைகளை குப்பை கூளங்களை நீக்குவதைப் போல விளக்குமாற்றினால் துடைத்து விடுவேன் என ஆறு மாத காலத்திற்கு முன்னர் அவர் கல்கத்தாவில் கர்ச்சிக்கத் தவறவில்லை. இந்தியத் தொழிலதிபர்கள், சுரண்டிக் கொழுக்கும் மமதையாளர்கள் ஜவகர்லால் நேரு "விளக்குமாறு சமதர்மம்" பேசுகின்றார் என்று நகையாடினர். என்றாலும் நேருவின் பேச்சு வாய் வீச்சாக நாவளவில் இருக்கிறதேயொழிய செயலாகத் திகழவில்லை.

ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்சு நாட்டில் பொருள்களின் விலை தாறுமாறாக ஏறிக் கொண்டிருப்பதைத் தடுக்க, பதுக்கல்காரர்களையும், கள்ளமார்க்கெட் பேர்வழிகளையும், கொள்ளை இலாப வேட்டைக்காரர்களையும் கடுமையாகத் தண்டித்து சிறையில் தள்ள சட்டம் கொண்டுவந்தனர். அதன் விளைவாக பிரான்சில் விலைவாசிகளின் நிலைமை கட்டுக்கு அடங்கியது.

இராணுவ சர்வாதிகாரி ஜெனரல் அயூப்கான் பாக்கிஸ்தானில் கொள்ளை இலாபக்காரர்களை, பதுக்கல்காரர்களை, கள்ளச் சந்தைக்காரர்களை கடுமையாகத் தண்டித்து பொருள்களின் விலையை ஆச்சரியப்படும்படி குறைத்துள்ளார்.

டாக்டர் சுகர்ணோ இந்தோனேசியாவில் பொருள்களின் விலை சீர்பட வேண்டி பொதுமக்களின் நலன்களுக்கு விரோதமாக செயல்படுகிறவர்களை தண்டிக்கவும், சிறைப்படுத்தவும் சட்டம் கொண்டுவந்துள்ளார். அதன் காரணமாக அங்கு பொருள்களின் விலை இறங்குமுகம் கண்டுள்ளது.

நேருவின் இந்தியாவிலோ பேச்சு பெரிதாய் இருக்கின்றது. செயலைக் காணவே முடியவில்லை. பொதுமக்கள் அவதிப்பட்டுத் திண்டாட, கயவர்கள் களிகொள்ளும் பாதகம் வளர்ந்து வருகின்றது.

இந்தியாவின் தேவைகள் முழுவதையும் தீர்த்துவைக்கும் அளவிற்கு சீனி உற்பத்தியிருந்தும், போலிப் பற்றாக்குறை நெருக்கடியை விளைவித்து பொருளீட்டும் கும்பல் பெருத்திருப்பது மேற்கண்ட நிலைமையைத் தெளிவு படுத்துகின்றது.

கொள்ளை இலாப வேட்டைக்காரர்களைக்கண்டுபிடித்துத் தண்டிக்கவும், இந்தப் பாதக நிலைமையை உருவாக்கத் துணைபுரிந்தவர்களை அறியவும், அரசாங்கத்தின் நிலைமையை அம்பலப்படுத்தவும் ஒரு விசாரணைக் குழு அமைக்கவேண்டியது மிக அவசியமாகும். ஆனால் உணவு அமைச்சரோ விசாரணைக் குழு தேவையற்றது எனக் கூறிவிட்டார்.

சமதர்மம் போதிக்கும் ஜவகர்லால் நேருவோ பொறுப்பற்ற முறையில் மௌனம் பூண்டுள்ளார். பொதுமக்களோ நெருக்கடியில் அகப்பட்டு மீளாத்துன்பத்தில் வாடுகின்றனர்.

அவர்களின் துயரம் துடைக்கப்பட, விலைவாசிகள் குறைக்கப்பட, முதலாளிகளின் கொள்ளை இலாபம் தடுக்கப்பட ஆவன ஆற்றுவது சர்க்காரின் உடனடிக் கடமையாகும். கடமையை நிறைவேற்றாதவர்கள் நீண்டகாலம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதில்லை. பொதுமக்களும் வாளாயிருந்துகொண்டிருக்க மாட்டார்கள்! இது வரலாறு தரும் படிப்பினை!

திருமண அழைப்பு

★

அன்புடையீர்; நலம் வேண்டுகிறேன். 6—9—59 ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை லாயிட்ஸ் ரோடு, 156-எண்ணுள்ள தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டிடத்தில் எனது மூத்த மகள் திருமதி சி. சரசுவதிக்கும் திரு. பி. வரதராசலு அவர்களின் மகன் திரு. பி. வ. சுதர்சனனுக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். கழகச் சொற்பொழிவாளர்கள், கலைஞர்கள் பாராட்டுரை வழங்குவர். தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

வணக்கம்.

சி. பி. சிற்றரசு.

முதலாளிகளின் கங்காணி மூவண்ணக் கொடியாட்சி!

விலைவாசிகளின் நிலைமை கட்டுக்கு அடங்காததாய் இருப்பதும், அதன் விளைவாக குறிப்பிட்ட மாத ஊதியம் பெறுகிறவர்களும், ஏழை எளியவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதும் காங்கிரஸ் ஆட்சியின் கருணைப் பணியாக தொடர்ந்து இருந்து வருகின்றது. கொள்ளை இலாப வேட்டைக்காரர்களின், கறுப்புச் சந்தைப் பேர்வழிகளின் திட்டமிடப்பட்ட சூதாட்டத்தால் திடீர் பற்றுக்குறை எதிர்பாராமல் ஏற்படுவதும், அதனால் பொது மக்கள் பாதிக்கப்படுவதும் மிகச் சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன.

சென்னை சர்க்கார் பொதுவாக கலம் ஒன்றுக்கு நெல் விலை ரூ. 8 என நிர்ணயித்தனர். ஆனால், இன்றைக்கு ஒரு கலம் நெல் ரூ. 11 விலைக்குக் கிடைப்பதே அரிதாக இருக்கின்றது. எந்த ஆண்டினைக் காட்டிலும் இவ்வாண்டு உணவு உற்பத்தி மிகவும் அதிகம் என அன்றாடம் ஆளும் அமைச்சர்கள் அறிவிக்கத் தவறுவதில்லை. ஆனால், நெல்லின் விலையோ நாளுக்கு நாள் விஷம்போல் ஏறி, பொதுமக்களுடைய இரங்கத்தக்க வாழ்க்கையை மேலும் பாதித்து நிலைகுலையச் செய்கின்றது பெரு நிலக்கிழார்களும், நெல் வியாபாரிகளும், மில் சொந்தக்காரர்களும் கொள்ளை இலாபம் அடைந்து வருகின்றனர்.

அன்றாட முக்கியத் தேவைகளில் திடீரென பற்றுக்குறையை போலியாக் ஏற்படச்செய்து, அந் நெருக்கடியின் விளைவாக கொள்ளை இலாபமடைந்து தங்கள் பாங்குக் கணக்கைப் பன்மடங்காக உயர்த்திக் கொள்ளுகின்ற கயவர்கள் காங்கிரசின் அலங்கோல ஆட்சியில் ஏராளம்.

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் இசைவோடு, சீனிப் பற்றுக்குறையை அத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் உருவாக்கி, அதன் வழி, கடந்த ஐந்து மாதங்களில் 16 கோடி ரூபாயை பொதுமக்களிடமிருந்து அநியாயமாகச் சுரண்டியுள்ளனர் என குற்றஞ் சாட்டி, பாராளுமன்றத்தில் இந்த வாரம் பல உறுப்பினர்கள் கடுமையாகப் பேசியுள்ளனர். சென்ற பொதுத் தேர்தலுக்காக காங்கிரஸ் கட்சி நிதிக்கு சர்க்கரை ஆலை முதலாளிகள் வழங்கிய நன்கொடைக்கும், இந்த மோசடிக்கும் தொடர்புண்டோ என்று ஐயம் தெரிவித்துப் பேசியுள்ளனர். உணவுத்துறை அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயின் அவர்கள் பதவியிலிருந்து விலகவேண்டும் என்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரினர். சீனிப் பற்றுக்குறையை போலியாக உருவாக்கி 16 கோடி ரூபாய் சம்பாதித்த விபரீத நிலை குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு அமைக்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் கேட்டுள்ளனர்.

சீனித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் கடந்த ஐந்து மாத காலத்தில் 16 கோடி ரூபாய் கள்ளச் சந்தையில் பொருளீட்டியுள்ளார்கள் என்பதையோ, வேண்டுமென்றே முன்கூட்டியே தாமாக திட்டமிட்டு போலிப் பற்றுக்குறையை ஏற்படுத்தி பொது மக்களைத் திண்டாடவிட்டுத் திணறடித்துள்ளனர் — சீனி விலையைக் கூடுதலாக்கியுள்ளனர் என்பதையோ உணவுத்துறை அமைச்சர் மறுக்கவில்லை.

ஆனால், இந்திய சர்க்காரும், உணவு அமைச்சருமே இலாப வேட்டைக்காரர்கள் கள்ளச் சந்தை மூலம் பொதுமக்களின் பணத்தை சூறையாடியதற்குப் பொறுப்பேற்கவேண்டும் என்பதை மட்டிலுமே உணவு அமைச்சர் ஜெயின் அவர்கள் மறுத்துள்ளார்.

இந்நிலைமையை நன்காராய்பவர்களுக்கு ஒன்று நன்கு விளங்கும். உணவு அமைச்சரின் கவனக் குறைவாலும், பெரும் முதலாளிகளின் இச்சைவழி நடக்கும் இந்திய அரசாங்கத்தின் உறுதியற்ற பலவீனப் போக்காலுமே, சீனி போதிய அளவு இல்லை எனும் பொய்யான நிலைமையை உண்டாக்கி, அப்பீதியை மூலதனமாகக் கொண்டு 16 கோடி ரூபாய் அளவிற்கு சீனித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்புள்ளிகள் இலாபம் அடைந்துள்ளனர், இதை மந்திரி மறுத்துப்பேசுவது தந்நிலைமையைப் பாதுகாத்துக் கொள்ளவே தவிர. பொதுமக்களின் நன்மையைப் பேணுவதற்கு அல்ல என்பதையும் நன்கறியலாம்.

இப்படித் திடீர் கொள்ளையடிக்கும் பெருந்தொழிலதிபர்கள் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் சட்ட சம்மதத்தோடும் நிறைய இலாபம் ஈட்டுகின்றார்கள். இவர்

சி. ஜம்பு

களது ஆட்சியில், பெருந்தொழில்களிலே ஈடுபட்டிருப்பவர்கள் அடையும் இலாபத் தொகை ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாகிக் கொண்டே வருகின்றது.

வரி விசாரணைக்குழு பாறுக்கியெடுக்கப்பட்ட 492 கம்பெனிகளின் 1946—51-ம் ஆண்டுகளின் வரி செலுத்துவதற்கு முன்னரேயுள்ள கூடுதல் இலாபத் தொகையைப்பற்றிய ஆராய்ச்சியொன்றை மேற்கொண்டது. கூடுதல் இலாபத் தொகையில் 43 சதவீதம வரிக்காக செலுத்துகிறதென்றும், 34 சதவீதம் பங்குதாரர்களுக்கு இலாபத் தொகையாக தரப்படுகிறதென்றும், 22 சதவீதம் தேய்மானம் நீக்கி நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தொகையாக அமைந்துள்ளதென்றும் அவ்வாரய்ச்சியின் மூலம் அறிய முடிகின்றது.

எனவே, செலுத்தப்படும் வரி, பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்படும் இலாபம், நிறுத்திவைக்கப்படும் இலாபத் தொகை இவைகளின் விகிதம் சுமாராக 4 : 3 : 2 என்பதாகஉள்ளது இதிலிருந்து கூடுதல் இலாபத்தில் வரியின் பங்கு அதிகமாக இருப்பதாக தொழிலதிபர்கள் முறையிட்டு, கடுமையான வகையில் இந்திய சர்க்காரின் வரிக்கொள்கையை கண்டிக்கவும் முற்படுகின்றனர்.

ஆனால், ஆங்கிலேய ஏகாதிபத்ய ஆட்சியில் கூடுதல் இலாபத்தில் வரியின் பங்கு அல்லது விகிதம் இன்னும் அதிகமாக இருந்தது.

1946-ம் ஆண்டில், அந்நியர்களின் ஆட்சியில் கூடுதல் இலாபத்தில் வரியின் பங்கு 50 சதவீதம் ஆகும். ஆனால், காங்கிரஸ் கட்சியின சமதாம ஆட்சியில் 1951-ம் ஆண்டில் கூடுதல் இலாபத்தில் வரியின் பங்கு 39 சதவீதம் உள்ளது. எனவே காங்கிரஸ் ஆட்சியில் வெள்ளைக்காரக் கொள்ளையாட்சியில்பெற்ற இலாபத்தைவிட அதிக இலாபத்தை தொழிலதிபர்கள் பெற முடிகின்றது இப்படிப்பட்ட சாதகமான நிலைமையை தொழிலதிபர்கள் காங்கிரசாட்சியில் அடைந்துள்ளனர்.

இந்தியாவின் ரிசர்வ் பாங்கு 750 கமபெனிகளின் 1950 முதல் 1955 முடிய ஆறு ஆண்டுகாலத்தின் நிதி நிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தது. சுரங்கம், மின்சாரம், கப்பல், தோட்டத் தொழில், உற்பத்தி இன்னோரன்ன பல்வேறு துறைகளில் உள்ள 5 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு செலுத்தப்பட்ட மூலதனம் கொண்டுள்ள கம்பெனிகளே இவ்வாராய்ச்சியில் அடங்கின. பொது லிமிடெட் கம்பெனிகளின் மொத்த செலுத்தப்பட்ட மூலதனத்தில் முக்கால் பங்கு மூலதனத்தை இந்த 750 கம்பெனிகளும் பெற்றுள்ளன.

இந்த விரிவான ஆராய்ச்சிகளிலிருந்தும் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலமான 1951-55ல் மொத்த கூடுதல் இலாபத் தொகை 382 கோடி ரூபாயில் 41 சதவிகிதம் வரியாகவும், 36 சதவிகிதம் பங்குதாரர்களுக்கு அளிக்கப்பட்ட இலாபமாகவும், 23 சதவிகிதம் நிறுத்திவைக்கப்பட்ட இலாபமாகவும் அமைந்துள்ளது.

எனவே, முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் கூடுதல் இலாபத்தில் வரியின் பங்கு அதிகமான அளவு மாறவில்லை. அத்துடன் 1955ம் ஆண்டை மட்டும் எடுத்துக் கொண்டால் மொத்த இலாபத்தில் வரியின் பங்கு 39 சதவிகிதம் ஆகும். ஆக, வெள்ளையன் காலத்தில் இலாபத்தில் வரியின் பங்கு 50 சதவிகிதம். ஆனால், காங்கிரஸ் சமதர்ம ஆட்சியில் லாபத்தில் வரியின் பங்கு 39 சதவிகிதம்.

இப்படி காங்கிரஸ் ஆட்சியில் கூடுதலாகவே இலாபத்தை இந்திய முதலாளிகள் அனுபவித்துக் கொழுத்து வருகின்றனர். தேசிய வருமானத்தில வரியின் விகிதம் உலகிலேயே இந்தியாவில்தான் மிகவும் குறைவாக இருப்பதால் மேலும் பல நன்மைகளை தொழிலதிபர்கள் சுவைக்க முடிகின்றது.

1951-ம் ஆண்டில் தேசிய வருமானத்தில் வரியின் விகிதம் இங்கிலாந்தில் 35 சதவிகிதம், ஜப்பானில் 23 சதவிகிதம், ஆஸ்திரேலியாவில் 22 சதவிகிதம், இலங்கையில் 20 சதவிகிதம் ஆனால் இந்தியாவிலோ 7 சதவிகிதம்தான்.

[தொடர்ச்சி பக்கம்—10]

2-மணி நேர அற்புதம்!

★

காமராசர் சாமான்யத் தோற்றம் உடையவர்தான்; ஆனால் அவர் செயல்கள் பிர்மாண்டமானவை!

அப்பப்பா! 'அரசியல் ராஷரிஷி'யாம் ராஜாஜியை காங்கிரசை விட்டே துரத்து துரத்தென்று துரத்தி எதிர்க்கட்சியிலேயே கொண்டுபோய்த் தள்ளிவிட்டாரே!

காங்கிரசின் பயங்கர விரோதி பெரியார் ராமசாமியை மயக்கு மயக்கென்று மயக்கி தன் கட்சியிலேயே சேர்த்துவிடுவார் போலிருக்கிறதே!

—என்ற புகழ் மாலைகள் ஏழைகளின் நண்பர் காமராசருக்கு அவருடைய சகாக்களால் சூட்டப்பெறுபவை!

புதிதாக இன்னொரு பூமாலையும் அந்த ஏழைகளின் நண்பருக்குக் கிட்டியிருக்கிறது.

ஆம்; காமராசரின் ஆட்சி, அண்மையில் மக்களிடம் கையேந்திக் கடன் கேட்டது, மற்ற மாநிலங்களைப் போலவே!

கடன் கேட்ட இரண்டே மணி நேரத்தில் அந்தக் கடன் முழுவதும் கிடைத்து விட்டது!

கடன் தொகைஎவ்வளவு தெரியுமா?

8,00,00,000!

ஆம்; 8 கோடி ரூபாய் இரண்டு மணி நேரத்தில் கிடைத்திருக்கிறது!

இது எதைக் காட்டுகிறது?

ஏழைகளின் காலணா, அரையணா சேர்ந்து வளர்ந்த கதையையா?—இல்லை—ஆலை அரசர்களின்—பணக்காரர்களின் அரவணைப்பு இந்த அரசாங்கத்திற்கு உண்டு என்பதையா?

செல்வாக்கு, செல்வந்தர்களிடம்! —எனவே, காமராசர் ஆட்சி செல்லும் பாதை சொல்லாமல் விளக்குகிறது!

ஒருசமயம் பண்டித நேரு கவலையுற்றார், பணக்காரர்களிடம் பணம் வாங்கினால், அவர்களின் செல்வாக்கு உயர்ந்து இயக்கத்தை அழிக்குமே என்று!

ஆனால் அவர் சீடர் பணக்காரரின் தயவுகொண்டு கடன் வாங்குவதில் 'ரிக்கார்டு' ஏற்படுத்தியிருக்கிறார், ரிக்கார்டு!

போலீஸ்......

[முதல் பக்கத் தொடர்ச்சி]

மரக : சரிதான்—இந்தப் பாட்டைப் பாடி தாலாட்டினு, சென்சார் ஆபீசர் தூங்கிடுவார்னு நினைக்கிறீங்களா? கத்தரிக்கோலை கருக்காத் தீட்டி பாட்டு முழுக்க வெட்டியெறிஞ்சிடுவாரு!

பொன்னு : அடடே.....நீ சென்சார் வரையிலும் தெரிஞ்சுவச்சுருக்கியா? அந்தக் காலத்திலே சென்சார்னு யாருக்கும் தெரியாது! இப்ப, இந்த தீனு மூனு காணுக்கள் சினிமா எழுதப் போயி, சென்சார் தண்ணிப் பட்ட பாடா போயிட்டுது!

மரக : அதிருக்கட்டும்; ஏன் இவ்வள நாழி? ஆகஸ்டு பதினைந்து முடிஞ்சுதான் பத்து நாள் ஆகுதே! இப்பக் கூடவா காலா காலத்திலே வீட்டுக்கு வர முடியிலே?....

பொன்னு : ம்! ஆகஸ்டு பதினைஞ்சு! செப்டம்பர் பதினைஞ்சு! எது முடிஞ்சாலும் நமக்கென்ன? — நமக்கு ஆயுள் முடிஞ்சாதான் நிம்மதி! குழந்தை தூங்கிவிட்டானு?... அவனுக்காக காராபூந்தி பகவடா வாங்கிட்டு வந்தேன்....

மரக : ஆமாம்....இந்த ஊசக் காராபூந்தியும் பகவடாவும் அவனுக்குக் கொடுத்து அவன் வயத்தைக் கெடுத்துடுங்க! அப்புறம் டாக்டருக்குக் கொடுக்க கூட கையில் காசு இருக்காது! ....இதை வாங்கின காசுக்கு எனக்குக் கொஞ்சம் பூ வாங்கிகிட்டு வரக் கூடாது?

பொன்னு : நாளைக்கு அருமையான கதம்பம் வாங்கி வர்றேன்....

மரக : நாளைக்குன்னு செவத்தில எழுதிவைக்க வேண்டியதுதான்! காலையிலே புறப்பட்டா ஜாமத்துக்கு வர்றீங்க!....

பொன்னு : என்ன பண்றது மரகதம்! மனிதனுக்கு வயிறு ஒண்ணு இருக்கே!

மரக : போலீஸ்காரர்களுக்கு இருதயம் இல்லைன்னு சொல்லுவாங்களே; அது மாதிரி வயிறும் இல்லாமல் போயிருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்?

பொன்னு : யார் சொன்னது போலீஸ்காரனுக்கு இருதயம் இல்லை யென்று? இருதயம் இருக்கிறது மரகதம்; இருதயம் நிச்சயமாக இருக்கிறது! வெளிநாட்டு மந்திரிகளோ, ராஜாக்களோ தங்களுடைய அழகிய மனைவிமார்களோடு பவனி வரும்போது வீதி யோரங்களிலே நின்று காவல் புரிவேன்; அப்போது உன்னுடைய நினைப்பு என் உள்ளத்தைக் குடையாமலா இருக்கிறது? அந்தக் குமாரி, இந்தக் குமாரியென்று பல குமாரிகளும் பேபிகளும் ஒய்யார நடனமாடும்போது நமது மந்திரிகள் எதிரே சோபாக்களில் அமர்ந்து ஆனந்தப் பரவசமடையும்போது கால் கடுக்க நின்று கடுங்காவல் தண்டனை அனுபவிக்கிறோமே; அப்போதெல்லாம் எங்கள் இருதயத்திலே கொந்தளித்துக் கிளம்புகின்ற எரிமலையின் குமுறலுக்குத் தாளத்தோடு அபிநயம் பிடித்து 'ருத்திர தாண்டவ,'மாட எந்தக் குமாரிகளாலும் முடியாது! பாராளுகிறவர்களை — ஆளப்படுகிறவர்களைப் பாதுகாக்கும் படை வீரர் நாங்கள்! ஆனல் "எங்களுக்கு, எங்கள் குடும்பத்துக்குப் பாதுகாப்புக்கு வழியில்லை" யென்று ஏங்கி ஏங்கி வெடித்துக் கொண்டிருக்கிற இருதயம் இதோ இருக்கிறது! **இந்த இருதயத்திலே சுயநலம் மட்டுமல்ல; பொது நலமும் பொங்கி வழிகிறது!** ஆனல் பொல்லாதவர்கள் கையிலே அதிகாரக் கடிவாளம் அகப்படும்போது, நாங்கள் இயந்திரங்களாக்கப்படுகிறோம்! எங்கள் கையிலேயிருக்கிற துப்பாக்கியின் விசை தட்டப்பட்டால் குண்டுமாரி பொழிகிறது! அதைப் போலவே எங்களையும் அடக்குமுறை ஆயுதங்களாக —ஜீவனற்ற கருவிகளாக ஆக்கிக் கொள்கிருர்கள் அதிகார வெறியர்கள்!...அதிருக்கட்டும். நீ ஒண்ணும் சுடலியா! இட்லிகிட்லி? தோசை கீசை?

மரக : தோசையும் சுடலே! இட்லியும் சுடலே! மத்தியான சோறு—தண்ணி ஊத்தி வச்சிருக்கேன்; திங்கிறீங்களா?

பொன்னு : இந்தக் குளிரிலே அதை வேற திங்கறதுன்னு முடியுமா? காலையிலே அதைப் பழையதா சாப்பிட்டுக்கலாம்!! பாயைப் போடு....நான் கொஞ்சம் கண்ணை மூடுகிறேன்; ஒரே களைப்பாயிருக்கு!

மரக : ஆமாம்—வந்தது வரங்காட்டியும் தூங்குங்க! கொஞ்ச நாழி பேசிகிட்டு இருக்கலாம்!

பொன்னு ; என்னுத்தப் பேசறது?....

மரக: பேச விஷயமா இல்லே?... (நாணுகிருள்)

பொன்னு : ஓ...காதல் 'டயலாக்'கா ?....(மரகதம் புன்னகை—)

பொன்னு : அடிசக்கை !...அய்! அய் !!...

மரக : போங்க !

பொன்னு : நான் எங்கே போவேன் பூங்கொடியே? கண்ணே! கண்களால் என்னைப் பார்! உன் பற்களால் சிரி!....ஆகா!கண்மணி! காதல் டுயட் பாடுவோமா?....

"குல்லாயும் தலையும் போல, துப்பாக்கியும் தோளும் போல. கோமளமே வாழ்ந்திடுவோம்!" எப்படி டுயட்?...அட பேசு, மரகதம்! நீயும் பேசு!

மரக : (நாடக பாணியில்) சுவாமி! உங்களைப் பிரிந்து என்னல் தனியாகவே இருக்க முடியவில்லை! தங்களைப்பிரிந்து இருப்பதைவிட தங்கள் கையால் சாவதுமேல் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யாமலே என்னை அழவைக்கிறீர்கள்! விலங்கு மாட்டாமலே என்னை இந்த வீட்டுக்குள் கைதிபோல அடைத்து வைத்திருக்கிறீர்கள்! ஒரு நல்ல நாள் — பெரிய நாள் — விழா — வேடிக்கை— சினிமா— நாடகம் — சேலை—ரவிக்கை—ஏதாவது நினைத்தபடி நடக்கிறதா எனக்கு ?

பொன்னு : சரிதான்! என்ன மோகனத்திலே ஆரம்பிச்சு முகாரியிலே கொண்டுவந்து முடிக்கிறே...

மரக : கேலி செய்தேன்; அவ்வளவுதான்!.......அதற்குள் 144 போடுகிறீர்களே யத்தான்!

பொன்னு : மரகதம்!...

மரக : ஏன் ?...

பொன்னு ; விளக்கை....?

மரக : நீங்களே....!

(பொன்னுரங்கம் விளக்கிடம் போகிருர். கதவு தட்டப்படும் ஒலி கேட்கிறது. போய்த் திறக்கிருர். அவசரமாக ஒரு போலீஸ்காரர் நுழைகிருர்.)

வந்தவர்: ஹலோ! 304!! இந்த ரயிலுக்கு யாரோ ஒரு மந்திரி வர்ருராம்—அதுக்கு உன்னையும் என்னையும் டுட்டி போட்டிருக்கு! புறப்படு சிக்கிரம்!!

(மரகதமும், பொன்னுரங்கமும் ஒருவர் முகத்தை யொருவர் அசடு வழியப் பார்த்துக் கொள்கிருர்கள். தொட்டிலில் கிடந்த குழந்தை அழுகிறது.)

பொன்னு : மரகதம்! நீ தாலாட்டுப் பாட்டை பாடிக்கிட்டு இரு! ....நான் போய் வயத்துப் பாட்டைப் பார்க்கிறேன்!.... போலீஸ்காரனுக்கு இருதயம் இல்லைன்னியே! இப்ப வேணும்னு காதை வச்சுக் கேளு. இருதயம் அழுகிற அழுகையை!............பொழுது விடிஞ்சா பொழுது போனு மந்திரிகளுக்கு 'பராக்' போடுகிற வேலையே சரியா இருக்கு! இப்படி ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனும் மந்திரி காவலுக்கு போலீசை அனுப்பிக்கிட்டேயிருந்தா ஊர்ல ஏன் கொள்ளை நடக்காது ? கொலை நடக்காது?...எல்லாம் நடக்கும்!... வாய்யா 504! போகலாம்!...

★ செப்டம்பர் 15! ★

தென்னகத்தார்,

சிந்தை-அணு-ஒவ்வொன்றும் செயல் மணக்கச் செய்திட்ட தலைவர்-இருட்டறையில் ஒளிவிளக்கு ஏற்றிவைத்த எழுத்துவேந்தர் — விடுதலை விடிவெள்ளி-எழுச்சி முரசம்-

எங்கள் அண்ணு

50-ம் ஆண்டு பொன்விழா மலர்

உங்கள் கரங்களை அழகுபடுத்தும்.

★ 'முரசொலி' வெளியிட்ட எந்த மலரும் ஏமாற்றம் தந்ததில்லை!

★ ஈடு இணையற்ற முயற்சியே முரசொலியின் தனிப்பண்பு!

★ அண்ணு பொன்விழா மலரை எத்துணை எழிலோடு முரசொலி வழங்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா?

★ மலர்பற்றி உங்கள் எண்ணங்களை வெளியிடுங்கள்.

ஒரு ரூபாய் விலையில்

...உயர்ந்த முறையில்...மலர் வருகிறது!

இப்போதே விற்பனையாளர்களிடம் உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

நீட்டோலை...

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

ஊருக்கு ஊர் உங்கள் கட்சியினர் வெளியிடும் அறிக்கைகளுக்கு இது போல மறுப்புக்கள் ஆயிரமாயிரம் எழுதிட எயமால் ஆகாதென எண்ணுதீர்கள்! இந்தத் துண்டு வெளியிட்டைத் தேவையான ஊர்களில் கழகத் தோழர்கள் மென்மேலும் அச்சடித்தே வழங்குவார்கள். உங்கள் கூற்றுக்கு மறுப்பு கூற வல்லவரே நாங்கள்! எங்கள் கொள்கை — திட்டங்கள் — சோடை, சொத்தைகள் அல்ல!

கொள்கையால் மோதாது — "அழகேசன் முறையில் மோதிக் கொள்ள வாரீர்!". என அழைப்பீர்களாயின் அதற்கும் தயார் என அறிவிக்கும் ஜாடைதான் இந்தக் கடிதம்; முடிந்தால் பதில் எழுதுங்கள்.

அன்புள்ள,

எழுத்தாணி.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.